Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 148 | சனிக்கிழமை 23 ஏப்ரல் 2022 | சித்திரை 10 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ.40

கொடிகாமத்தில் துயரம்

## ரயிலுடன் மோதியது பட்டா! சிறுவன் பலி: இருவர் காயம்!



யாழ்ப்பாணம், ஏப். 23
யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் நேற்று ரயிலுடன் பட்டாரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில், 15 >



கொடிகாமம் ரயில் விபத்தையடுத்து

## தண்டவாளத்தில் எரியூட்டி பொதுமக்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 23
யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்தில் ஒரு 15 >

# பிரதமர் தலைமையிலான அமைச்சரவை வேண்டாம்

அரச தரப்பு எம்.பி. டலஸ் அழகப்பெரும கோரிக்கை

**கொழும்பு, ஏப்ரல் 23**

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவை உடனடியாகப் பதவி விலகி, அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு வழிவிட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார் பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும. 15 >

## கொலைகாரக் கோத்தாவை விரட்டும்வரை ஓயாதீர்!

மக்களுக்கு சந்திரிகா அறைகூவல்

கொழும்பு, ஏப். 23
கொலைகார ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை வீட்டுக்கு விரட்டும்வரை மக்கள் ஓயாமல் போராட வேண்டும் இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 15 >

ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு

## இனிமேல் துப்பாக்கிகள் பயன்படுத்தப்படாது!

பொலிஸ் மா அதிபர் உறுதிமொழி

கொழும்பு, ஏப். 23
பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இனிவரும் காலங்களில் துப்பாக்கிகள் பயன்படுத்தப்படாது என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். 15 >

## இரண்டு வாரங்களை கடந்தும் காலிமுகத்திடலில் பேரெழுச்சி

கொழும்பு, ஏப். 23
அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி காலிமுகத்திடலில் இடம்பெற்று வரும் மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் நேற்றுடன் இரண்டு வாரங்களைக் கடந்தது.
போராட்டத்தின் 14ஆவது நாளான நேற்று அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறும், பதாகைகளை ஏந்தியவாறும் இளைஞர்கள் 15 >

## நேர்மையான அதிகாரிகளை பந்தாடும் வடக்கு ஆளுநர்!

சர்வாதிகாரப்போக்கு எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 23
வடக்கு மக்களின் உரிமைகளை மத்திய அரசாங்கத்துக்கும், தென்னிலங்கைக் [illegible]க்கும் திட்டங்களுக்கு உடன்பட மறுக்கும் நிர்வாக அதிகாரிகளை வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, தன்னிஷ்டப்படி 'டம்மி' பதவிகளுக்கு பந்தாடுகின்றார் என்ற குற்றச் 15 >

## ஏற்றியது லிட்ரோ இறக்கியது அரசு

கொழும்பு, ஏப். 23
12.5 கிலோகிராம் எடையுள்ள லிட்ரோ எரிவாயுவின் விலையை லிட்ரோ நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் சுமார் 2 ஆயிரத்து 500 ரூபா வரை விலையேற்றிய நிலையில், அரசாங்கம் அந்த விலையேற்றத்துக்கு அனுமதி வழங்க மறுத்துள்ளது. 15 >

அகதிகளாக

## இந்தியாவுக்கு மேலும் 18 பேர்

இதுவரை 60 பேர் தஞ்சம்

யாழ்ப்பாணம், ஏப். 23
இலங்கையிலிருந்து நேற்றுமுன்தினம் மட்டும் மேலும் 18 பேர் அகதிகளாக இந்தியாவைச் சென்றடைந்தனர். 15 >

ரம்புக்கனை துப்பாக்கிச்சூடு

## சமிந்தவின் சாவு படுகொலையே!

கொழும்பு, ஏப். 23
சமிந்த லக்சானின் மரணம் ஒரு படுகொலை எனவும், மேலும் அது ஒரு குற்றவியல் சார்ந்த குற்றம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
ரம்புக்கனையில் பொதுமக்களின் போராட்டத்தின்போது 15 >

## நஸீர் நீக்கம்

கொழும்பு, ஏப். 23
சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.
கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.
இது குறித்து கருத்து 15 >

## தடுப்புக்காவல் கைதி தற்கொலை முயற்சி?

யாழ்ப்பாணம், ஏப். 23
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் கழுத்தில் வெட்டுக்காயத்துடன் யாழ். போதனா மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளார். 15 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 வருடங்கள் கடந்தும் குற்றவாளிகள் எங்கே?

## சர்வதேச மன்னிப்புச்சபை விசனம்

**கொழும்பு, ஏப்.23**

**இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று 3 வருடங்கள் கடந்துள்ள போதும், குற்றவாளிகள் ஏன் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை என்று சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி எழுப்பியுள்ளது.**

இதுதொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம் பெற்று 3 வருடங்களாகின்ற போதி லும் அரசாங்கம் இன்னமும் குற்ற வாளிகளை நீதியின் முன் நிறுத்த வில்லை.

இலங்கையின் பல பகுதிகளில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளால் 250க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட னர். நாம் தாக்குதலில் பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆதரவாக உள் ளோம்.

பாதிக்கப்பட்டவர்கள் நீதிக்கான தங் கள் வேண்டுகோள்கள் குறித்து மிகவும் உறுதியாக உள்ளனர்.

இலங்கையின் பல பகுதிகளில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களுடன் இணைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலை சாட்டாக வைத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஆயுதமாகப் பயன்படுத்துவதன் மூலம் சிறுபான்மைச் சமூகத்தி னரைத் தாக்குவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

சுயாதீனமாக விசாரணைகளை மேற்கொண்டு, நியாயமான விசா ரணைகள் மூலம் குற்றவாளிகளை நீதியின் முன்நிறுத்தவேண்டிய கடப்பாடு அதிகாரிகளுக்கு உள் ளது - என்றுள்ளது. (க-இ)

# உணவகங்களுக்கு தொடர் நெருக்கடி

கொழும்பு, ஏப்.23

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் மற் றும் எரிவாயு இன்மையால், உணவக உரிமையாளர் கள் பலர் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இத னால் அவர்கள் மாற்றுத் தொழில்களை நாட வேண் டியுள்ளது என்று இலங்கை சிற்றுண்டிச்சாலை உரி மையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பெரிய அளவிலான எரிவாயு சிலிண்டர்கள் மாத்தி ரமே சந்தையில் கிடைக்கின்றன.

தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் காரணமாக எரிவாயு விநியோகஸ்தர்கள் வணிகப் பயன்பாட்டுக் காக வீட்டு எரிவாயு சிலிண்டர்களை வழங்க நடவ டிக்கை எடுத்துள்ளனர்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால் தொழில்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அர சாங்கத்திடம் சலுகைகள் கிடைக்காமையால், ஊழி யர்களும் நிதி நெருக்கடியால் தொழிலைவிட்டு வெளி யேறியுள்ளனர் என்று சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (க-இ)



ரம்புக்கனையில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட் டில் கொல்லப்பட்ட கே.டி.சமிந்த லக் ஷானின் உடல் அவரது இல்லத்தில் நேற்று அஞ்சலிக்காக வைக்கப்பட் டது. அவரின் இறுதிக்கிரியைகள் ஆயுதப் படையினரின் பாதுகாப்புடன் நேற்று மாலை நடைபெற்றது. இறுதிச் சடங்குகள் தெவலேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாரம் பெத்த ஹிரிவடுன்ன மயானத்தில் இடம்பெற்றன. (எ-இ)

# உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட தேரர் மருத்துவமனையில்

கொழும்பு, ஏப்.23

அரசாங்கத்துக்கு எதிராகக் காலிமுகத் திடலில் இடம்பெற்றுவரும் போராட் டத்தில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டி ருந்த தெரிபெஹே ஸ்ரீதம்ம தேரர் நேற்றுக் காலை கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளார். அரசாங்கத்தைப் பதவி விலகு மாறு கோரி ஸ்ரீதம்ம தேரர் மூன்று நாள்களாக உணவு தவிர்ப்பில் ஈடு பட்டிருந்தார்.

அதேவேளை மாத்தறை விமலதேவ தேரர் மற்றும் மாலபே சீலரத்ன தேரர் ஆகியோரும் காலிமுகத்திட லில் உணவு தவிர்ப்புப் போராட்டத் தில் ஈடுபட்டுள்ளனர். (க-இ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி படுகொலை

கொழும்பு, ஏப்.23

பணக்கொடுக்கல் வாங்கல் காரணமாக நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப் பட்டு படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பதுளை யில் உள்ள வர்த்தக நிலை யம் ஒன்றுக்கு முன்பாக நடந்துள்ளது.

சம்பவத்தில் விமலதர்ம மாவத்தையைச் சேர்ந்த 46 வயதுடைய நபர்படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ள னர். கூரிய ஆயுதத்தால் தாக்கிய சந்தேகநபர் தலை மறைவாகியுள்ளார். அவ ரைக் கைதுசெய்ய பதுளை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (க-இ)

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு,ஏப்.23

இனந்தெரியாத நபர் நடத் திய துப்பாக்கிப் பிரயோகத் தில் 28 வயதுடைய இளை ஞர் ஒருவர் உயிரிழந்துள் ளார். இந்தச்சம்பவம் கொஸ் கொட ஆரண்ய பகுதியில் நேற்று நடந்துள்ளது. மேல திக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

# 21ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கு 225 பேரும் ஆதரவளிக்க வேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, ஏப்.23

ஐக்கிய மக்கள் சக்தியால் சமர்ப் பிக்கப்பட்டுள்ள 21 ஆவது அர சமைப்பு திருத்தத்துக்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்க ளும் ஆதரவளிக்க வேண்டும். மக்களின் கோரிக்கைக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தத் திருத்தத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் விவாதத் துக்கு எடுத்துக்கொள்ள சபாநா யகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக் கள் சக்தியின் பங்காளிக் கட்சி கள் கோரிக்கை விடுத்தன.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்துகொண்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் அகில இலங்கை மக் கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் இந்தக் கோரிக்கையை முன்வைத்த னர்.

அங்கு கருத்துத் தெரிவித்த த. மு.கூ. தலைவர் மனோ கணேசன் தெரிவித்ததாவது:

21 ஆவது திருத்தத்துக்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர் களும் கைகளை உயர்த்தி ஆதரவளிக்கவேண்டும்.

மக்களின் கோரிக்கையையே நாடாளுமன்றத்தில் நாம் முன் வைத்துள்ளோம். 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்த மைக்கு ஆளுந்தரப்பு மக்களி டம் மன்னிப்புக் கோர வேண் டும்.

ஆனால் இவர்கள் 21 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறி அதனை வேறுபளிக்கின்றனர். அதற்கு அவர்கள் வெட்கப்படவேண் டும்.

இந்தத் திருத்தத்தில் நாடாளு மன்றத்துக்கு அப்பால் நிபுணர் கள், இளைஞர்கள், கல்வி மான்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட குழுவினரை உள்ள டக்கி ராஜசபையொன்று நிய மிக்கப்படவேண்டும் என்ற யோசனை உள்ளடக்கப்பட்டுள் ளது.

21 ஆவது திருத்தம் ஊடாக முழு நிறைவேற்றதிகார பிரத மரைக் கொண்டு வருவதற்கு நாம் முயற்சிக்கவில்லை.

மாறாக ஜனாதிபதி மற்றும் பிர தமருக்கு சம அதிகாரங்களை வழங்கவே நடவடிக்கை எடுத் துள்ளோம்.

எனவே நாட்டின் நன்மையை யும் மக்களின் கோரிக்கையை யும் கருத்திற்கொண்டு சபாநாய கர் விரைவில் விவாதத்துக்கு இதை எடுத்துக்கொள்ள நடவ டிக்கை எடுக்கவேண்டும்-என் றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தா வது:

நாட்டு மக்கள் 'கோத்தா கோ ஹோம்' என்று ஆர்ப்பாட்டங் களில் ஈடுபட்டுள்ள இந்தச் சந் தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சு பொறுப்புக்களை ஏற்பது பொறுத்தமற்றது.

ராஜபக்ச அரசாங்கத்தில் பிரத மர் பதவியை வழங்குவதாக அறிவித்தால்கூட அதை ஏற்க நாம் தயாராக இல்லை.

தற்போது இராஜாங்க அமைச்சு பொறுப்பை ஏற்றுள்ளவர்க ளையும் பதவியிலிருந்து விலகி எம்முடன் இணையவேண்டும் என்று அழைப்பு விடுக்கின் றோம்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிக்கு தீர்வைக் காணாது ஆளுங்கட்சி அரசியல் சூதாட்டம்

## சஜித் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஏப்.23**

**நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்குத் தீர்வைத் தேடாமல், ஆளுங்கட்சி அரசியல் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த அரசு மீது மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டனர். ஆனால் நம்பிக்கை தெரிவிக்கும் யோசனைகள் ஆளுங்கட்சிக்குள் நிறைவேற்றப்படுகின்றன.

பிரதமர் தலைமையில் நடைபெற்ற ஆளுங்கட்சிக் கூட்டத்தில் 86 பேர் ஆதரவு வழங்கியுள்ளனர். நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை என்பது 113. எனவே, 86 பேர் ஆதரித்தால், அதனைப் பெரும்பான்மை என ஏற்றுக்கொள்ள முடியுமா?

ஜனாதிபதி பதவியில் இருக்கட்டும், பிரதமர் பதவி விலகட்டும் என ஒரு சாராரும், இல்லை பிரதமர் பதவியில் இருக்கட்டும், ஜனாதிபதி வீடு செல்லட்டும் என மற்றுமொரு சாராரும் ஆளுங்கட்சிக்குள் குறிப்பிடுகின்றனர். ஆட்சியாளர்கள் இவ்வாறு அரசியல் சூதாட்டத்தில் ஈடுபடுகின்றனர். இவர்கள் மக்கள் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடவில்லை.

வரவு - செலவுத் திட்டம் திருத்தி அமைக்கப்படவேண்டும். எமது ஆட்சியில் விசேட ஊழல் ஒழிப்புப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படும். அதன்மூலம் பதுக்கப்பட்டுள்ள பணம் எமது நாட்டுக்குக் கொண்டு வரப்படும் -என்றார். (க-44)




# எரிபொருள் விநியோகம் வழமைக்கு

கொழும்பு, ஏப்.23

எரிபொருள்கள் விலையேற்றத்தின் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து, ரயில்கள் மற்றும் பவுசர்கள் மூலம் எரிபொருள்கள் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு எரிபொருள்களைக் கொண்டு செல்லும் வாகனங்கள் வீதித்தடைகள் மற்றும் பொருத்தமற்ற சூழல் நிலவியதன் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

எரிபொருள்கள் கொண்டு செல்லும் பவுசர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அடுத்த சில நாள்களில் எரிபொருள்கள் விநியோகத்தை மீளமைக்கும்போது 24 மணித்தியாலங்கள் விநியோகம் உறுதி செய்யப்படும். ஏறக்குறைய 600 பவுசர்கள் மற்றும் எரிபொருள்கள் கொண்டு செல்லும் பாரவூர்திகளைக் கொண்ட 5 ரயில்கள் நாடு முழுவதும் எரிபொருள்களை எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபடும் -என்றார். (க-இ)

# பாடசாலைப் புத்தகங்கள் அச்சிடும் பணி முழுமை

கொழும்பு, ஏப்.23

பாடசாலைகளுக்குத் தேவையான பாடப்புத்தகங்களை அச்சிடும் பணிகள் தற்போது முழுமையடைந்துள்ளன என்று அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

புத்தகங்களை பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் இறுதிக் கட்டத்தை அண்மித்துள்ளது என்று அவர் தெரிவித்தார். அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மின்சார நெருக்கடியால் பாதிப்படைவார்கள் என்று எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் அடுத்த மாதத்தை அண்மிக்கும் போது நாள் ஒன்றில் இரண்டு மணித்தியாலங்கள் மாத்திரம் மின் துண்டிக்கப்படலாம் -என்றார். (க-இ)

# மனித உரிமை ஆணைக்குழுவில் பொலிஸ்மா அதிபர் முன்னிலை

கொழும்பு, ஏப்.23

ரம்புக்கனையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையானார்.

கடந்த 19 ஆம் திகதி ரம்புக்கனையின் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது மக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளுக்காக இவர் அழைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கேகாலை மற்றும் ரம்புக்கனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோரும் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ரம்புக்கனையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் நாரண்பெத்த பிரதேசத்தைச் சேர்ந்த சமிந்த லக்ஸன் என்பவர் உயிரிழந்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு சம்பவ இடத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குறித்த குழு சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்துக்குத் தனது பரிந்துரைகளை வழங்கவுள்ளது. (க-இ)




**ஊர்** என்னதான் சொன்னாலும் அதையெல்லாம் காதிலையே வாங்கிக் கொள்ளாமல் திரியிற ஆக்களை அடிக்கடி கண்டிருப்பியள். அப்பிடியான வேலையை சில அரசாங்கத் திணைக்களங்களும் சபையளும் செய்யும். அவைக்கு தாங்கள் எப்ப நினைக்கினமோ அப்பதான் ஏதும் செய்வினம். தங்களில ஏதும் குறை சொன்னாலோ, பிழை பிடிச்சாலோ 'அதெல்லாம் எங்களுக்குத் தெரியும். நீங்கள் பொத்திக்கொண்டு இருங்கோ' எண்டமாதிரி அலட்சியமா நடப்பினம். இப்பிடி அலட்சியத்துக்கு பேர் போன ஒரு சபை இருக்குது. அதுதான் வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

ஊரில மேசன்மார் ஒரு வேலையை எடுத்தால், அதில ஒரு கொஞ்சத்தை செய்திட்டு பிறகு அப்பிடியே அதைவிட்டுட்டு இன்னொரு இடத்துக்கு போடுவினம். பிறகு அதையும் தொடங்கிட்டு மற்றொரு இடத்துக்கு போவினம். இப்பிடி எல்லா இடத்திலையும் வேலையளை தொடங்கிட்டு, ஒண்டையும் ஒழுங்கா முடிக்காமல் இழுத்தடிக்கிறது மேசன்மாருக்கு கைவந்தகலை. அந்த வேலையைத்தான் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் செய்து கொண்டிருக்கு.

யாழ்ப்பாணத்திலையே கனக்க வீதியள் இப்பிடி புனரமைப்பு வேலை தொடங்கி அரைகுறையா அப்பிடியே கிடக்கு. இதுக்கு முதல் ஏதோ அட்ஜஸ்ட் பண்ணியாவது போய்வரக்கூடிய மாதிரி இருந்த றோட்டுகளிலகூட இப்ப கல்லும், மண்ணும் பறிச்சு, நடுவுக்க கிண்டி விட்டிருக்கிறதால அதுகளால போய் வாறதே ஒரு சாகசம் மாதிரி ஆகிட்டுது.

இப்பிடி மாசக்கணக்கில றோட்டுகள் அரைகுறைப் புனரமைப்போட இருக்குது எண்டும், அதுகளைக் கெதியாப் புனரமையுங்கோ எண்டு சனங்களும், அந்த றோட்டுகள் இருக்கிற பிரதேச சபைகளும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கனக்க தரம் முறைப்பாடு குடுத்தும் ஒரு பிரியோசனமுமில்லை. எல்லாம் செவிடன் காதில ஊதின சங்குதான். 'நீங்கள் சொல்லி நாங்கள் செய்ய வேணுமோ?' எண்ட மிதப்புத்தான் உதுக்கு காரணம்.

இப்பிடி றோட்டு வேலையள் அரைகுறையா கிடக்க கிடக்க, அக்சிடெண்டுகளும் கூடிக்கொண்டே போகுதே. அப்பிடி அநியாயமாக பறிபோற உயிர்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்ன பதில் சொல்லப் போகுது? எண்டு சனங்கள் கேக்கத் தொடங்கி இருக்கினம். அதிகாரிமாருக்கு என்ன, அவை நல்ல சொகுசு வாகனங்களில அலுங்காமல், குலுங்காமல் வந்து, ஏசிக்குள்ள இருந்திட்டு, கைநிறையக் காசையும் வாங்கிக் கொண்டு போவினம். ஆனால் அவையின்ர அலட்சியத்தால கஷ்டப்படுறது சனங்கள் எல்லோ. 'கொஞ்சமாவது வாங்கிற சம்பளத்துக்கு வஞ்சகம் செய்யாமல், வேலையையும் இடைக்கிடையாவது பாருங்கோ' எண்டு கேக்கிற சனங்களின்ர குரல், உந்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கேக்குமோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் மீண்டும் டெங்கு: ஏப்ரல் மாதம் 14 பேருக்குத் தொற்று



சாவகச்சேரி,ஏப்.23

**தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்றால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் நேற்றுமுன்தினம்வரை 14 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.**

இதேவேளை, நேற்றுமுன்தினம் மீசாலை மேற்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் டெங்கால் பீடிக்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நான்கு வருடங்களுக்கு முன்னர் இந்தச் சிறுவர்களின் தாயார் டெங்கால் பீடிக்கப்பட்டு பிரசவத்தின் பின்னர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. பிரதேசத்தின் கொடிகாமம், மந்துவில், வரணி, சாவகச்சேரி நகரம், எழுதுமட்டுவாழ், நாவற்குழி போன்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் டெங்கால் பீடிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டு வருவதால் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று சுகாதாரப்பிரிவினர் எச்சரித்துள்ளனர். (க-9)



# நல்லிணக்கச் செயற்றிட்டம்

மன்னார், ஏப்.23

தேசிய சமாதானப் பேரவை மற்றும் தொடர்பாடலுக்கான பயிற்சி மையம் ஆகியவை இணைந்து மன்னார் மாவட்டத்தில் பிரதேசரீதியில் முன்னெடுத்து வரும் மத சகவாழ்வுக்கான கூட்டு ஈடுபாடு செயற்றிட்டத்தின்கீழ் இளைஞர்களை மதரீதியாக நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கான கருத்தமர்வு நேற்றுமுன்தினம் மன்னார் ஜூலி தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்தக் கருத்தமர்வில் தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தால் மன்னார் மாவட்டத்தில் 4 வருடங்கள் மேற்கொள்ளப்படவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இந்தச் செயற்றிட்டத்துக்குள் புதிதாக இளைஞர்கள் உள்வாங்கப்பட்டு புதிய இளைஞர் குழுவினூடாக கிராம ரீதியாகக் காணப்படும் மதரீதியான பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான நடைமுறைச் செயற்பாடுகள் ஆகியவை குறித்து பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ச-213)

# அறங்காவலர் தின நிகழ்வு

சாவகச்சேரி, ஏப். 23

பளை- மல்வில் கிருஷ்ணன் கோயில் தர்மகர்த்தா கார்த்திகேசு சின்னத்தம்பி நினைவு அறக்கட்டளை ஏற்பாட்டில் அறங்காவலர் தினநிகழ்வு நாளை முற்பகல் 9.30 மணிக்கு கோயில் ஷரன்ஜா நினைவு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதன்போது நினைவுப்பேருரையைக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் ஆற்றவுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு,கிழக்கு பிராந்திய டயலொக் நிறுவன முகாமையாளர் தி.சிவகுகன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-14,9)

# மருத்துவமனையின் உணவகத்தை குத்தகைக்கு வழங்குவதில் இழுபறி

## நோயாளர்கள் சிரமம்

சாவகச்சேரி, ஏப்.23

சாவகச்சேரி மருத்துவமனையில் உள்ள சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவதில் இழுபறி ஏற்பட்டுள்ளதால், நோயாளர்கள் உணவுக்காக வெளியே செல்ல வேண்டியுள்ளது. யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் வருடா வருடம் சாவகச்சேரி மருத்துவமனையின் சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்கப்பட்டு வருகின்றது. 2022 ஆம் ஆண்டு குத்தகைக்கு எவரும் எடுக்காத நிலையில் சிற்றுண்டிச்சாலை கடந்த நான்கு மாதங்களாக மூடப்பட்டுள்ளது.

சிற்றுண்டிச்சாலையை ஒருவருக்கு இந்த வருடத்துக்கு குத்தகைக்கு வழங்க நோயாளர் நலன்புரி சங்கத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டனர். எனினும் நிர்வாகத்தினர் வேறு ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளதாகக் கூறி சங்கத்தின் கோரிக்கையை நிராகரித்துள்ளனர்.

நிர்வாகங்களுக்கிடையில் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவதில், இழுபறி காணப்படுவதால், மருத்துவமனை விடுதியில் தங்கியுள்ள நோயாளர்கள் உணவுக்காக தொடர்ந்தும் வெளியில் செல்ல வேண்டியுள்ளது. (க-9)





# புலிகளின் ஆயுதங்களைத் தேடி முல்லைத்தீவில் அகழ்வுப் பணி!

முல்லைத்தீவு, ஏப். 23

புதுக்குடியிருப்பு - உடையார் கட்டு குரவில் பகுதியில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைத் தேடும் அகழ்வுப் பணிகள் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த பகுதியில் உள்ள காணியில் போருக்கு முன்னர் புலிகளின் முகாம் காணப்பட்டதையடுத்தே இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் போது காணியில் வெவ்வேறு 3 இடங்களில் குழிகள் வெட்டியபோதும் ஆயுதங்கள் சார்ந்த பொருள்கள் எதுவும் கிடைக்காததால் அகழ்வு நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. முல்லைத்தீவு மாவட்ட குற்றவியல் பொலிஸாரின் தலைமையில் கிராம அலுவலர், மருத்துவப் பிரிவினர், பொலிஸார், படையினர், சிறப்பு அதிரடிப்படையினர் ஆகியோரின் முன்னிலையில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (எ-14,19)

# பல்கலை மாணவர்களின் முன்மாதிரியான செயற்பாடு

வவுனியா,ஏப்.23

வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் மன்னார் வீதியில் அதிகம் பாவிக்கப்படும் பஸ் தரிப்பிடத்தைத் தெரிவு செய்து சுத்தமாக்கி, வர்ணம் பூசி அழகுபடுத்தியுள்ளனர்.

வவுனியா பல்கலைக்கழக மின்னியல், மின்னணு வியல் பொறியாளர் கழக மாணவர் கிளையால் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (க-110)

சாவ.மருத்துவமனை

# சத்திர சிகிச்சைப் பிரிவு மே மாதம் திறக்கப்படும்

## கேதீஸ்வரன் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஏப். 23

சாவகச்சேரி மருத்துவமனையில் அமைக்கப்பட்ட விபத்து சத்திரசிகிச்சைப் பிரிவு மே மாதம் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று சாவகச்சேரி மருத்துவமனையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சத்திர சிகிச்சைப் பிரிவுக்கான ஆளணி மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு ஜூன் மாதம் முழுமையாக இயங்கும். அதுவரை மருத்துவமனையில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி இயங்கும்.

சிகிச்சைப் பிரிவுக்கு 3 மாடிக் கட்டடம் அமைப்பதற்கு மத்திய சுகாதார அமைச்சு 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியது. கட்டடத்தின் இரு மாடிகளின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்ட நிலையில் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெறும் விபத்துக்களுக்கு உடனடிச் சிகிச்சையளிப்பதற்காகவே இந்தச் சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் திறக்கப்படவுள்ளது- என்றார். (எ-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்கத்துக்கு எதிராக மன்னாரில் போராட்டம்

**மன்னார், ஏப். 23**

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு கோரி அரசாங்கத்துக்கு எதிராக மாந்தை மேற்கு பிரதேசசபை உறுப்பினர்களால் போராட்டம் நேற்றுமுன்தினம் பிரதேசசபை முன்றிலில் முன்னெடுக்கப்பட்டது.**

போராட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். "இரத்தவெறி பிடித்தவனே நாட்டை விட்டு வெளியேறு", "மக்களை பட்டினிச்சாவில் தள்ளாதே", "மக்களை கொன்று அரசியல் செய்யாதே", "விவசாயத்தில் கை வைத்து நாட்டை அழிக்காதே", "சொந்த மக்களை சுட்டுத் தள்ளாதே" உள்ளிட்ட பல்வேறு கோஷங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(எ-14-213)

# முல்லையில் இன்று போராட்டம்

முல்லைத்தீவு, ஏப். 23

நாட்டில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்சக்கள் ஆட்சியை விட்டு விலகக்கோரி தென்னிலங்கையில் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக வன்னி மக்கள் சார்பில் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

போராட்டம் இன்று காலை 9.30 மணிக்கு முள்ளியவளை கொமர்ஷல் வங்கியில் இருந்து ஆரம்பமாகி நெடுங்கேணிச் சந்தி வரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் இன, மத, கட்சி பேதமற்று அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(எ-14-19)

# ஜனாதிபதி முறைமையை நீக்குவது தவறான முடிவு

## பொன்சேகா போர்க்கொடி

கொழும்பு, ஏப்.23

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தவறான முடிவென்று, இலங்கையில் இறுதிக்கட்டப்போரை வழிநடத்திய இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி, நாடாளுமன்ற ஆட்சி முறைமையை உருவாக்கும் விதத்தில் ஐக்கிய மக்கள் சக்தியால் 21 ஆவது திருத்தச்சட்டம் நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான சரத் பொன்சேகா, அதற்கு மாறுபட்ட கருத்தை சபையில் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என கருத்து முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் பிரச்சினையொன்று உள்ளது. பாடசாலையில் அதிபர் ஒருவர் திறம்பட செயற்படவில்லை என்பதற்காக, அதிபர் பதவியையே இல்லாதொழிப்பதுதான் தீர்வு இல்லை. அப்படியான அதிபரை நீக்கிவிட்டு, தகுதியானவரைப் பதவிக்குக் கொண்டு வருவதே சிறந்த நடவடிக்கையாக அமையும்.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் ஜனாதிபதி ஆட்சி முறைமையே இருக்கின்றது.

எனவே, நிறைவேற்று, சட்டவாக்கம், நீதி ஆகிய முத்துறைகளும் உரிய வகையில் செயற்படக் கூடிய விதத்தில் மாற்றியமைக்கலாம். அதனை விடுத்து, ஜனாதிபதி முறைமையை மாற்றுவது ஏற்புடையது அல்ல. தகுதியான நபர்கள், தகுதியான இடத்துக்கு வரவேண்டும். அதற்காக இலங்கை அரசியல் கலாசாரம் மாறவேண்டும் -என்றார்.

(க-44)



# கோத்தாவின் உருவப்பொம்மையை எரித்து வலி.தென்மேற்கு பிரதேசசபையில் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.23

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறையைக் கண்டித்து, வலி.தென்மேற்கு பிரதேசசபை முன்பாக, கோத்தாபயவின் படம் பொறிக்கப்பட்ட உருவப்பொம்மை நேற்று எரிக்கப்பட்டது

வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் உறுப்பினர்கள் எரிபொருள்கள் தட்டுப்பாட்டை வெளிப்படுத்தும் முகமாக எரிபொருள் கொள்கலன்களில், மஹிந்த ராஜபக்சவின் படங்களைத் தொங்கவிட்டு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். தொடர்ந்து கோத்தாபயவின் படத்தைத் தாங்கிய உருவப்பொம்மைக்குத் தீ வைத்து எதிர்ப்பை வெளியிட்டனர்.

அரசாங்கத்துக்கு எதிராக மத, இன வேறுபாடின்றி அனைத்து மக்களும் ஓரினமாக இணைந்து முன்னெடுத்துள்ள போராட்டங்களுக்கு அரசாங்கம் மேற்கொள்ளும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சபை உறுப்பினர் ஒருவர் காவி சுற்றிய சிலுவையைத் தாங்கி, சபை முன்றிலில் வலம் வந்தார். சபையின் உறுப்பினர்களும் சிவப்புப் பட்டிகளை அணிந்திருந்தனர்.

(க-125)

# ரம்புக்கனை சூட்டுச் சம்பவம்; 4 துப்பாக்கிகள் பயன்பாடு

கொழும்பு, ஏப்.23

ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தின் போது, நான்கு ரி-56 ரக துப்பாக்கிகள் மற்றும் 35 தோட்டாக்கள் பொலிஸாரால் பயன்படுத்தப்பட்டமை தெரிய வந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசேட பொலிஸ் குழு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அதேவேளை சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு சம்பவ இடத்தில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

(க-இ)

# காலம் வந்தவுடன் பதவி விலகுவார்!

## 'கோத்தா கோ ஹோம்' கோஷம் வேண்டாம்; கீதா குமாரசிங்க வேண்டுகோள்

ஜனாதிபதி பதவி விலகுவதற்கான காலம் வந்ததும் அவர் அந்தப் பதவியிலிருந்து விலகிவிடுவார். எனவே கோத்தா கோ ஹோம் என்று கூறுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கலாசாரம் மற்றும் கலை நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாக்குகளால் வெற்றி பெற்று வந்த பின்னர் ஏன் கோ ஹோம் சொல்ல வேண்டும்? சிறிமாவோ பண்டாரநாயக்க, பிரேமதாஸ, ஜே.ஆர். ஜயவர்தன ஆகியோரை வீட்டுக்குச் செல்லுமாறு கூறியபோது அவர்கள் சென்றார்களா?.

இளைஞர்கள் தமது மன இறுக்கங்களிலிருந்து விடுபட காலிமுகத்திடலுக்கு வருகை தருகின்றமை கவலை தருகின்றது. இதன் பின்னணியில் குழந்தைகளை விற்று உண்ணும் வகையிலான குழு ஒன்று உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டு பலன்கள்




மங்கலகரமான **'சுபகிருது'** புத்தாண்டு கடந்த 14.04.2022 வியாழக்கிழமை அன்று பிறந்தது. குரு வாரத்தில், குருபகவான் தன் சொந்த வீடான மீனராசியில் இருக்கும் நேரத்தில் பிறக்கும் இந்தப் புத்தாண்டு பல்வேறு நன்மைகள் தரப்போகிறது. சுபகிருது என்றாலே நற்செய்கை என்று பொருள். சுபகிருது வருடத்தில் நாடெங்கும் நல்ல மழை பெய்யும் சுபீட்சமாக விளங்கும் என தமிழ் பஞ்சாங்கம் கணித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக நோய்களின் பிடியில் சிக்கித்தவித்த மக்கள் இந்த ஆண்டு நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.




மற்றவர்களின் வெற்றிக்காக பாடுபடும் நீங்கள் மற்றவர்களை மகிழ்வித்து மகிழ்பவர்கள் உங்கள் ராசிக்கு 6வது ராசியில் இந்த சுபகிருது ஆண்டு பிறப்பதால் எதிரிகளை வீழ்த்தும் வல்லமை உண்டாகும்.
கனிவான பேச்சு வேலைக்காகாது. இனி கறாராகத்தான் பேச வேண்டுமென்ற முடிவுக்கு வருவீர்கள். ஏதாவது காரியமாக வேண்டுமென்றால் உங்கள் காலை பிடிப்பதும், கையைப் பிடிப்பதுமாக இருந்தவர்களையெல்லாம் ஒத்துக்கித்தள்ளுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். சேமிக்கும் அளவுக்கு வருவாய் அதிகரிக்கும்.
உங்கள் ராசிக்குள்ளேயே குரு வந்தமர்வதால் வீண்அலைச்சல், அலைக்கழிப்பு குறையும். பல நாள்கள் தூக்கமில்லாமல் தவித்தீர்களே! இனி ஆழ்ந்த உறக்கம் வரும். முன்கோபம் அதிகரிக்கும். உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளை விட வேண்டாம். ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள்.
குடும்பத்திலும் சிறுசிறு வாக்குவாதங்கள் வந்து போகும். கணவன்-மனைவிக்குள் வீண்சந்தேகத்தைத் தவிர்ப்பது நல்லது.
இந்தாண்டு முழுக்க சனிபகவான் லாப வீட்டில் நிற்பதால் செயலில் வேகம் கூடும். வருமானம் உயரும். பிரபலங்களின் பட்டியலில் இடம்பிடிப்பீர்கள்.
தொலைநோக்குச் சிந்தனை அதிகரிக்கும். பெரிய பதவிகள் தேடி வரும். அழகு, இளமை கூடும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணியை முடித்து புது வீட்டில் குடிப்புகுவீர்கள். அனுபவபூர்வமான பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.
வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அரசாங்க விஷயங்கள் நல்ல விதத்தில் முடிவடையும். கடன் பிரச்சினைகள் ஓயும். அயல் நாடு செல்ல விசா கிடைக்கும்.
சுயதொழில் தொடங்கும் முயற்சியில் இறங்குவீர்கள். சொந்த ஊரில் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

வருடம் முடியும்வரை கேது 8லும், ராகு 2லும் வந்தமர்வதால் சில நேரங்களில் கறாராகப் பேசி சிலரின் மனதை புண்படுத்துவீர்கள். நீங்கள் சில சமயம் சாதாரணமாகப் பேசுவது கூட சண்டையில் போய் முடியும். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம்.
எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். குடும்பத்திலும், வெளிவட்டாரத்திலும் கொஞ்சம் வளைந்துக் கொடுத்துப் போவது நல்லது.

**01.09.2022 முதல் 25.09.2022 வரை**
சுக்ரன் 6இல் அமர்வதால் அந்தக் கால கட்டத்தில் கணவன்- மனைவிக்குள் சந்தேகத்தால் சின்னச் சின்ன வாக்குவாதங்களும் வரக்கூடும். மனைவிக்கு சிறுசிறு அறுவைச் சிகிச்சைகளும் வந்துபோக வாய்ப்பிருக்கிறது.
வேலையில் ஆர்வம் அதிகரிக்கும். என்றாலும் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். எவ்வளவு உழைத்தாலும் உங்களைப் பற்றி குறை கூறத்தான் செய்வார்கள். கவலைப்படாதீர்கள், கடமையைச் செய்யுங்கள். வைகாசி, ஆவணி மாதங்களில் வெளி நிறுவனங்களில் நல்ல வாய்ப்புகள் தேடி வரும்.
நீங்கள் நேர்ப்பாதையில் செல்வது நல்லது. உயர் அதிகாரிகளை விமர்சிக்க வேண்டாம். வேலைச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.
கணினி துறையில் இருப்பவர்களுக்கு வேலைபளு அதிகமானாலும் அதற்குத் தகுந்த சம்பள உயர்வும் உண்டு. மார்கழி, தை மாதங்களில் புது நிறுவனத்தில் வேலை கிடைக்கும்.

**இந்தப் புத்தாண்டு சின்னச் சின்ன இடையூறுகளைத் தந்தாலும், பக்குவப்படுத்தி வருடமுடிவில் வசதியாக்கும்.**

## குருப்பெயர்ச்சி பலன்கள்




**சுபகிரகமான அதிசார குரு பெயர்ச்சி கடந்த 14ஆம் திகதி கும்பத்திலிருந்து மீன ராசிக்கு நிகழ்ந்தது. இந்தப் பெயர்ச்சியால் ஏற்படும் பலன்கள் 12 ராசிகளுக்குப் பார்ப்போம்.**

விளிம்பு நிலை மக்களின் முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட பண்பாளர் நீங்கள். உங்கள் ராசிக்கு 12ஆம் வீட்டில் அமர்ந்து வீண் செலவுகள் அலைச்சல்களைக் கொடுத்துவந்தார் குருபகவான். இப்போது, 14.04.2022 முதல் 22.04.2023 வரை, ஜன்ம குருவாக இருந்து பலன் தரப் போகிறார். பொறுப்புகளும், வேலைச்சுமையும், தேடலும் அதிகரிக்கும்.
சிற்சில தருணங்களில் அதிகாரப் பதவியில் இருப்பவர்களை எதிர்க்கும் சூழல் வரலாம். உங்களால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாத சூழல் ஏற்படலாம். ஆகவே, எவருக்கும் வாக்குறுதி அளிக்கவேண்டாம். ஜன்ம குருவாக இருப்பதால், அவ்வப்போது முன் கோபம் தலைதூக்கும். பழைய விவாதங்களை நினைத்து மனதில் விரக்தி ஏற்படும். சிலருக்கு ரத்த அழுத்த பாதிப்பு உண்டாகலாம்.
தலைச் சுற்றல், உறக்கமின்மை ஏற்பட வாய்ப்பு உண்டு. எனினும் பயம் தேவையில்லை. அன்றாட பழக்கவழக்கங்களை முறைப்படுத்தினால் போதும். யோகா தியானம் ஆகிய பயிற்சிகள் நன்மை அளிக்கும். தன்னம்பிக்கையை வளர்ப்பது அவசியம். சகலமும் உங்களுக்குச் சாதகமாகும்; தெய்வ வழிபாடும் துணை நிற்கும்.
வீட்டில் வீண் சந்தேகத்தால் கணவன்- மனைவிக்குள் பிரிவு ஏற்படக்கூடும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. அதேபோல், உங்கள் குடும்ப விஷயத்தில் மற்றவர்களைத் தலையிட அனுமதிக்காதீர்கள்.
உறவுகளும் நட்புகளும் சில தருணங்களில் ஏமாற்றம் அளிப்பார்கள். உங்களின் தன்மானத்தைப் பாதிக்குமளவுக்குச் சில சொந்த பந்தங்கள் நடந்து கொள்வார்கள். அவர்களின் நடவடிக்கைகளைப் பொருட்படுத்த வேண்டாம். நீங்கள் எல்லோரிடமும் அன்பு செலுத்துங்கள்.
மனதைத் தளரவிடாதீர்கள். எப்போதும் உங்கள் இயல்புக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம்.

**14.04.2022 முதல் 29.04.2022 வரை**
குருபகவான் பூரட்டாதி நட்சத்திரத்தின் 4ம் பாதத்தில் செல்வதால், மனச் சோர்வு நீங்கும். எந்தக் காரியத்தையும் சுறுசுறுப்புடன் செய்து முடிப்பீர்கள். சிலருக்கு வேலை கிடைக்கும். பணம் வரும்.

**30.04.2022 முதல் 24.02.2023 வரை**
சனிபகவானின் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் தடைகள் நீங்கும். விலையுயர்ந்த பொருள்களை வாங்குவீர்கள்.
குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். 08.08. 2022 முதல் 16.11.2022 வரை உத்திரட்டாதி நட்சத்திரத்திலேயே குரு வக்ரத்தில் செல்வதால், அலைச்சலுடன் ஆதாயமும் உண்டாகும்.

**24.02.2023 முதல் 22.04.2023 வரை**
குருபகவான் புதனின் ரேவதி நட்சத்திரத்தில் செல்வதால் நண்பர்கள், உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும். புதன் பாதகாதிபதியாக இருப்பதால், தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை.

**வியாபாரத்தில்**
பெரிய முதலீடுகள் வேண்டாம். அதேபோல் போட்டியாளர்களை ஒப்பிட்டுச் செயற்படாதீர்கள். உங்களுக்கான நேரம் வரும் போது சகல நன்மைகளும் தாமாகவே தேடி வரும்.

**உத்தியோகத்தில்**
உயரதிகாரிகள் உங்களை நம்பிப் பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சம்பளம் உயரும். சலுகைகளும் உண்டு.

**மொத்தத்தில் இந்தக் குருப்பெயர்ச்சி, உங்கள் வாழ்வில் சில பாடங்களைக் கற்றுத் தருவதாக அமையும்.**

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சிகளில் சுமாரான வெற்றி உண்டு. கலகலப்பான நாள். பேச்சு, செயலில் கவனமாக இருக்க வேண்டும். சுறுசுறுப்பான நாள். தாழ்வு மனப்பான்மை தலைதூக்கவிட வேண்டாம்.

**இடபம்:** பேச்சு, செயலில் கவனமாக இருந்தால் பிரச்சினை இல்லை. சகபணியாளரைப் பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. பெண்கள் நன்மை செய்வர். சுறுசுறுப்பானநாள்.

**மிதுனம்:** பணியாளர்களுக்கு கவலை தீரும். குழந்தைகள் உங்களை மகிழ்விப்பர். உங்கள் மீது வீண் பழி வராதபடி பார்த்துக்கொள்ளுங்கள். நினைத்த சாதனை திட்டப்படி நிறைவேறும்.

**கடகம்:** உங்கள் அருமையை மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள். நீண்ட காலமாக இருந்து வரும் கடனைத் தீர்க்க முயற்சி எடுப்பீர்கள். விரும்பிய பொருளை வாங்குவீர்கள்.

**சிம்மம்:** வேலை ஒன்றை முடிப்பதால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். தன் னம்பிக்கை துளிர்விடும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உங்களது முயற்சிகள் தாமதமாகப் பலன் தரும்.

**கன்னி:** நிம்மதி வரும். வழக்கு சாதகமான திசையை நோக்கிச் செல்லும். [illegible] வீர்கள். நன்மை உண்டு.

**துலாம்:** நண்பர்களுக்கு ஆலோசனைகளை வழங்கிப் பாராட்டுப் பெறுவீர்கள். காத்திருந்த செயலில் வெற்றி கிட்டும். கவலை ஒன்று தீரும். நெருங்கிய ஒருவருக்கு உதவி செய்வீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் ஒருவருக்காக மற்றவர் உதவியை நாடுவீர்கள். புது நபரின் பாராட்டுக் கிடைக்கும். தர்ம சிந்தனை அதிகரிக்கும். புதிய செயல் மூலம் பாராட்டு வரும்.

**தனுசு:** பகை பாராட்டிய உறவினர், நண்பர்கள் இணங்கி வருவார்கள். [illegible] கவனத்துடன் சேமிக்க [illegible]ங்குவீர்கள். தொழில், பணியில் ஆர்வம் கூடும். பகை விலகும்.

**மகரம்:** மனதுக்கு மகிழ்வான சந்திப்பு ஒன்று இன்று நிகழும். பணியின் நுணுக்கத்தை அதிகாரியிடம் கற்றுக் கொள்வீர்கள். அளிக்கப்பட்ட பொறுப்பைச் சிறப்பாக முடித்து மகிழ்வீர்கள்

**கும்பம்:** எதிலும் புதுமை படைப்பீர்கள். தாயாரால் நன்மை ஏற்படும். சுற்றியுள்ளோர் அன்புடன் உதவுவார்கள். நிதானமான நாள். திறமையுடன் செயற்படுவதால் பாராட்டுக் கிடைக்கும்.

**மீனம்:** அத்தியாவசியமான விலை உயர்ந்த பொருள் ஒன்றை வாங்குவீர்கள். தகுந்த ஆலோசனை கிடைப்பதால் வெற்றி அடைவீர்கள். மகிழ்ச்சியான திருப்பம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கோத்தாபயவை விடவும் பேராபத்தானது மதவாதம்!

நாட்டின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் பௌத்த மகா சங்க ஆணை பிரகடனப்படுத்தப்படும் என்று நாட்டின் மூன்று பிரதான பௌத்த பீடங்களும் இணைந்து அரசாங்கத்தை எச்சரித்துள்ளன. புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சரவையால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை, 20ஆவது திருத்தம் நீக்கப்பட்டு 19ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும், அமைச்சர்களும் அதிகாரிகளும் எந்த வரப்பிரசாதங்களையும் பயன்படுத்தக்கூடாது, பொதுமக்களின் போராட்டத்தில் பலப்பிரயோகத்தை அரசாங்கம் மேற்கொள்ளக்கூடாது என்றவாறாக அமைந்துள்ளது மகா சங்கங்களின் வலியுறுத்தல்.

பௌத்த பீடங்களின் மகா சங்க ஆணையென்பது சிங்கள மக்களிடையே அதிலும் குறிப்பாக சிங்கள பௌத்தர்களிடையே அதிமுக்கியத்துவம் மிக்கதொன்றாகவே பார்க்கப்படுகின்றது. மன்னராட்சிக் காலம்முதல் நடைமுறையில் இருக்கும் இந்த 'மதப் பாரம்பரியம்' ஒரு பிரச்சினைக்கு எதிராக அல்லது ஒரு தீவிரமான விடயத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிரயோகிக்கப்படும் இறுதி அஸ்திரம். இந்த அஸ்திரம் பயன்படுத்தப்பட்டுவிட்டால் அதற்கு பௌத்தர்கள் அனைவரும் கட்டுப்பட்டே ஆகவேண்டும் என்பது எழுதப்படாத விதி. மகா சங்கத்தின் ஆணையை பொருட்படுத்தாதவர்கள்-பின்பற்றத் தவறுபவர்கள் பௌத்த சிங்களவர்கள் தம் உயிருக்கு நிகராக நினைக்கும் 'பௌத்த மதக்கோட்பாடு'களில் இருந்து விலக்கி வைக்கப்படுவார்கள். எனவே தாம் பௌத்தர்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய ஆட்சியாளர்கள் விரும்பியோ, விரும்பாமலோ பௌத்த மகாசங்க ஆணைக்குக் கட்டுப்படத்தான் வேண்டும். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இதுவரை அப்படியொரு மகாசங்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கோத்தாபயவின் ஆட்சி அதற்கும் வழிகோலிவிட்டது.

அரசாங்கத்தின் ஜனநாயக விரோதப்போக்கைக் கண்டித்தும், அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் வலுப்பெற்றுள்ள போராட்டங்களுக்கு ஆதரவாகவும் பௌத்த மகா பீடங்கள் ஓரணியில் நின்று இந்தக் 'காத்திரமான' முடிவை பூர்வாங்கரீதியாக அல்லாமல் கொள்கை ரீதியாக மேற்கொண்டு அதை வெளிப்படையாக அறிவித்தமை வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான்.

ஆனால், இன்னொருவகையில் பார்த்தால் பௌத்த பீடங்களின் இந்த அறிப்புக்கூட ஒரு ஜனநாயக விரோதப் போக்குத்தான். உண்மையில் இதுபோன்ற 'பௌத்த சித்தாந்தத்தின்' அதீத தலையீடுதான் இந்த நாடு இன்று இவ்வளவு பெரிய சாபக்கேட்டுக்குள் தள்ளப்படுவதற்கு முதன்மைக் காரணம். அதில் இரண்டாவது பேச்சுக்கு இடமில்லை. பின்னொரு காலத்தில் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வைத் தர சிங்கள ஆட்சியாளர்கள் நினைத்தாலும் கூட இப்போது அரசாங்கத்தை மிரட்ட பௌத்தமத பீடங்கள் எடுத்த அதே மகா சங்க ஆணையைப் பிரயோகித்து தடுத்து நிறுத்தும் பேரபாயமும் இதன்மூலம் வெளிப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் ஆழமாகப் புரையோடிப்போயுள்ள இனவெறிக்கும் மத வெறிக்கும் காலத்துக்குக் காலம் தலைதூக்கிய பௌத்த பேரினவாதம் தான் காரணம். என்றோ தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய இந்த இனப் பிரச்சினைகள் இன்றளவும், எப்போது வேண்டுமானாலும் பற்றியெரியலாம் என்ற தணல் நிலையில் நிலைத்து, நீண்ட ஆயுளோடு இருப்பதற்கும் 'பௌத்த சித்தாந்த' அச்சுறுத்தலே காரணம். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைந்திருக்கக்கூடிய பல ஒப்பந்தங்களை பௌத்த பிக்குகளின் எதிர்ப்புகளே கிழித்தெறியவைத்தன. இந்த நிலைமை இனியாவது இல்லாமலாக வேண்டும் என்றுதான் இன்று வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்கின்ற அத்தனை இலங்கையர்களும் விரும்புகின்றார்கள்.

அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி, தமது வாழ்க்கைச் செலவைக் குறைத்து ஜனநாயகப் பண்புடன் நாட்டை ஆட்சி செய்யவல்ல மாற்று அதிகாரமொன்றையே மக்கள் தேடுகின்றனர். அதற்குத் துணைநின்று மக்களை வழிப்படுத்தவேண்டிய தார்மீகக் கடமை மூன்று பௌத்த மகா பீடங்களுக்கும் இருக்கின்றது. ஆனால், அதற்குள்ளும் பௌத்த சித்தாந்தத்தையும், பௌத்த எதேச்சதிகாரத்தையும் வலிந்து திணித்தல் சுத்த அபத்தமன்றி வேறென்ன?

இந்தச் சித்தாந்தத் திணிப்புத்தான் இலங்கையின் தலைவிதியை இந்தளவுக்கு நாசமாக்கியது. மக்கள் சக்திதான் மாபெரும் சக்தி. அந்தச் சக்திக்கு ஓர் உயிர்நாடியாக இருங்கள். 'மக்களுக்கு மேலான' மதசக்தி என்ற மாயப் பிம்பமொன்றை ஏற்படுத்த எத்தனிக்காதீர்கள். அது கோத்தாபய அரசாங்கத்தை விடவும் பேராபத்தானது. மகா சங்கத்தினரின் பிரகடனம் மக்கள் சக்திக்கு அப்பாற்பட்டது என்றால், எதற்காகத் தேர்தல்கள்? மகா சங்கத்தின் ஆணையை சீரான இடைவெளியில் பிரகடனப்படுத்தினாலே போதுமே!

## நாளொரு நல்வார்த்தை

"உண்மையான செல்வாக்கை நாம் தேடிக்கொள்ளக் கூடாது. அது நம்மைத்தொடர்ந்து வர வேண்டும்" – **மான்ஸ்பீல்டு**




# மருத்துவ வழங்கல் பிரிவில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

**கொழும்பு, ஏப்.23**

**கொழும்பு மருத்துவ வழங்கப் பிரிவில் 525 மருந்துகள் மற்றும் 5 ஆயிரத்து 376 சத்திர சிகிச்சை உபகரண வகைகள் தீர்ந்துள்ளன என்று அரச ஔடதவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

மருத்துவ விநியோகப் பிரிவில் இருக்க வேண்டிய மருந்து வகைகளில் 50 சதவீதமானவை தீர்ந்து போயுள்ளன என்று அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டில் அத்தியாவசியமான 70 மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இந்த மருந்துகள் கையிருப்பில் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தனியார் மருத்துவமனைகள் சங்கம் சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கடிதம் மூலம் கோரியுள்ளது என்று தெரியவருகின்றது. (எ-இ)

## நாணயப் பரிமாற்றுக் காலம் நீடிப்பு

கொழும்பு, ஏப்.23

இலங்கை மத்திய வங்கிக்கான 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணயப் பரிமாற்றத்தின் காலத்தை இந்திய ரிசர்வ் வங்கி நீடித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிறைவடைந்த நாணயப் பரிமாற்றக்காலமே நீடிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தனது உத்தியோகபூர்வ ருவிற்றரில் பதிவிட்டுள்ளது.

(க-இ)

# இந்தியக் கடன் திட்டத்தின் ஊடாக வாராந்தம் 1,500 மெ.தொன் அரிசி

கொழும்பு, ஏப்.23

இந்தியாவின் கடன் திட்டத்தின் கீழ் வாராந்தம் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் என்று இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சதொச கிளைகள் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக பொதுமக்களுக்கு அரிசி சலுகை விலைக்கு வழங்கப்படும். 16 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 26 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்குக் கிடைக்கும் என்று இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(க-இ)

**நாளை**
24.04.2022
ஞாயிற்றுக்கிழமை
சித்திரை 11
சுபநேரம் : 09.00 - 10.30
ராகுகாலம்: 08.52 - 04.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பின்புலத்தில் பெரும்புள்ளி!

## கொழும்புப் பேராயர் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஏப்.23**
**உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணை இடம்பெறாமை போன்ற செயற்பாடுகளின் பின்புலத்தில், நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் பெற்றுக்கொண்ட நட்சத்திர அதிகாரம் பொருந்தியவரா இருக்கின்றார்? என்ற சந்தேகம் எழுகின்றது என்று கொழும்புப் பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூர்ந்து கொழும்பு - கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆராதனையில் கலந்துகொண்ட போதே கொழும்புப் பேராயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பாக திருப்தியடைய முடியாது . இந்தத் தாக்குதலின் பின்புலத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு அப்பால் பெரும் சதித்திட்டம் ஒன்று உள்ளது. ஒரு தலைப்பட்சமாக ஒரு சில விடயங்களை மறைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சியை நிராகரிக்கின்றோம் - என்றார். (எ-இ)



உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்களை நினைவு கூர்ந்து வவுனியா பெரிய பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் மாலை அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. மதகுருமார்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து அஞ்சலி செலுத்தினர். (ச-110)

## கொழும்புப் பேராயர் வத்திக்கான் பயணம்

கொழும்பு,ஏப்.23
கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான 60 பேர் கொண்ட தூதுக்குழுவினர் நேற்று வத்திக்கானுக்குப் பயணித்துள்ளனர்.

தூதுக்குழுவினர் பாப்பரசரின் பிரான்சிஸின் அழைப்பை ஏற்று அங்கு சென்றுள்ளனர் என்று அருட்தந்தை ஜூட் கிறிஷாந்த உறுதிப்படுத்தியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் பேராயருடன் வத்திக்கானுக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு நீதி கோரி நடிகர் ஜெஹான் ஹப்புஹாமி மேற்கொண்டுவரும், சிலுவை தாங்கிய நடைபவனிப் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது. நேற்று வத்தளை தேவாலயத்தில் ஆரம்பித்து கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்துக்குச் சென்று அங்கு ஆராதனையில் ஈடுபட்டு பின்னர் அங்கிருந்து காலிமுகத்திடல் நோக்கி சிலுவை தாங்கிய நடைபவனிப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அவருக்கு ஆதரவாக இந்த நடைபவனியில் பலர் ஆராதனைகளில் ஈடுபட்டவாறு பங்கேற்றனர். (எ)

## மக்கள் மீதான தாக்குதல்களை கண்டித்து சபையில் தீர்மானம்

கிளிநொச்சி, ஏப்.23
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் யாழ்ப்பாணத்தில் தாக்கப்பட்டமை மற்றும் ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஆகியவற்றைக் கண்டித்துக் கரைச்சிப் பிரதேசசபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவருக்கு நீதி பெற்றுக் கொடுக்கவேண்டும் எனவும், இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் எந்த இன மக்களுக்கும் இடம்பெறக்கூடாது என்றும் பிரேரணை முன்வைக்கப்பட்டது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முன்னெடுத்த போராட்டத்தில் பொலிஸாரால் தாக்கப்பட்ட தாய்மாருக்கு ஆதரவாக கண்டனப் பிரேரணை நிறைவேற்றாது, இந்த விடயம் தொடர்பில் பிரேரணை சமர்ப்பிப்பது பொருத்தமற்றது என சபையில் பிரதேச சபை உறுப்பினர் ரஜனிகாந் குறிப்பிட்டார்.

அதற்கு பதிலளித்த தவிசாளர் பிரேரணைகளை எந்த உறுப்பினரும் கொண்டுவர முடியும். அதை தவிசாளர் கொண்டு வர வேண்டியதில்லை. இன்று ஒரு உறுப்பினர் சிங்கள மகன் ஒருவர் கொலை செய்யப்பட்டமையைக் கண்டித்துப் பிரேரணை சமர்ப்பித்தார். நீங்களும் உறுப்பினர் என்றவகையில் அந்தச் சம்பவம் தொடர்பில் பிரேரணை சமர்ப்பித்திருக்க முடியும். ஆனால் அதை நீங்களும் செய்யவில்லை. வேறு எந்த உறுப்பினரும் செய்யவில்லை எனவும் தெரிவித்தார்.

அதன்பின்னர் இரு விடயங்களையும் உள்ளடக்கிக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ-113)

## சாரா உயிரிழக்கவில்லை நாடாளுமன்றில் தகவல்!

கொழும்பு. ஏப்.23
சாரா ஜெஸ்மின் தற்போது இந்தியாவில் உள்ளார். அவர் இன்னும் உயிரிழக்கவில்லை என்பது உறுதியாகியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஏப்ரல் 21 இல் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட பிரதான தலைவருடன் சாரா ஜெஸ்மின் இருந்தார். எனினும் சாரா ஜெஸ்மின் இப்போது இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. களுவாஞ்சிக்குடி முன்னாள் பொறுப்பதிகாரி தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். தற்போதும் அவர் சிறையில் உள்ளார். அவரே சாரா ஜெஸ்மினை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார் என்று கூறப்படுகின்றது.

உயிரிழந்தவர்களில் சாரா ஜெஸ்மின் இல்லை என்பது உறுதியாகியுள்ளது. ஆனால் சாரா ஜெஸ்மினை கைது செய்வதற்கு இன்னும் இந்த அரசாங்கம் சர்வதேசப் பிடியாணை பெறவில்லை. ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என இவர்கள் காண்பிக்க முயன்றனர். முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனை இதில் சிக்க வைக்க முயன்றனர். அவ்வாறானால் இந்தத் தாக்குதலுடன் தொடர்பில்லாதவர்களை அரசாங்கம் ஏன் இதனுடன் தொடர்புபடுத்த முற்பட்டது? - என்றார். (எ-இ)



# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணகர்த்தாவைக் கண்டறிக

## *அருட்பணி சூ.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தெரிவிப்பு*

மன்னார், ஏப்.23
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் காரணகர்த்தா யாராக இருந்தாலும் தண்டனை வழங்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என தாழ்வுபாடு பங்குத்தந்தை அருட்பணி சூ.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் மூன்றாண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தால் மன்னாரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இந்த அஞ்சலி நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கப்பெறவேண்டும். அத்துடன் இந்தப் படுகொலையின் காரணகர்த்தாவை கண்டறிந்து தண்டனை வழங்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என அரசாங்கத்தைக் கோருகிறோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் தாழ்வுபாடு பங்குத் தந்தை அருட்பணி சூ.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் மூர் வீதி பெரிய பள்ளிவாசல் மௌலவி அசீம், பிரஜைகள் குழு செயலாளர் ஏ.பத்திநாதன் குரூஸ் உட்பட பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டங்களின்போது வீதியை முடக்காதீர்கள்!

## இராணுவத்தினர் கோரிக்கை



**கொழும்பு, ஏப்.23**

**பொதுமக்கள் வீதி மறியல்களைத் தவிர்த்து, போக்குவரத்துச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முழுமையான ஆதரவை வழங்கவேண்டும் என்று இராணுவத்தளபதி கோரியுள்ளார்.**

இது தொடர்பில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்ற மக்கள் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். அவற்றுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும், போக்குவரத்துச் செயற்பாடுகளுக்கும், அத்தியாவசிய பொருள்களின் விநியோகச் செயற்பாடுகளுக்கும் தடைகளை ஏற்படுத்தவும் சில தரப்புக்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதனால் பொலிஸ்மா அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க, போக்குவரத்துச் செயற்பாடுகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புகளை வழங்குவதற்காக இராணுவத்தினரும் ஏனைய படையினரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எனவே பொதுமக்கள் வீதி மறியல்களைத் தவிர்க்கவேண்டும் - என்றுள்ளது. (க-இ)

## இராஜாங்க அமைச்சு மீண்டும் மாற்றம்



கொழும்பு, ஏப்.23

மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜித பேருகொட நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சராக, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் துறைமுகம் மற்றும் கப்பல் துறை இராஜாங்க அமைச்சராக கடந்த 19 ஆம் திகதி பதவிப் பிரமாணம் செய்திருந்தார். (க-இ)

## 5 மாகாணங்களில் மழை தொடரும்



கொழும்பு, ஏப்.23

5 மாகாணங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் சில பிரதேசங்களில் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும்.

ஏனைய மாகாணங்களில், பகலில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளையில் மழை மற்றும் மின்னல் தாக்கங்களிலிருந்து பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-இ)

## தனியார் பேருந்துகளில் முறைகேடு பயணிகள் முறையிட ஒழுங்கமைப்பு

கொழும்பு, ஏப்.23

பயணிகள் தனியார் பேருந்துகளில் பயணிக்கும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில், தேசிய போக்குவரத்து ஆணையத்திடம் முறைப்பாடு தெரிவிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆணையத்தின் பணிப்பாளர் நாயகமான நிலான் மிராண்டா தெரிவித்துள்ளதாவது பயணச்சிட்டைகளை வழங்காமை மற்றும் உண்மையான கட்டணத்தை விட அதிகத் தொகையை அறிவிடுவது என பயணிகள் அசெகரியங்களை எதிர்கொள்ள நேரிடும்.

எனவே அனைத்து பேருந்துகளிலும் பயணிகள் தெளிவாகக் காணக்கூடிய வகையில் மாகாணங்களுக்கிடையிலான மற்றும் மாகாண திருத்தக் கட்டணங்கள் காட்சிப்படுத்தப்படவேண்டும். கட்டணத்தின்படி பயணச்சிட்டை வழங்கப்படவேண்டும். உரிய நிலுவைத் தொகை பயணிகளுக்குத் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். பயணிகள் 24 மணித்தியாலங்கள் செயற்படும் 1955 என்ற கட்டணமில்லா எண் மூலம் முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். 0712 595 555 என்ற வட்ஸ்அப் எண்ணைப் பயன்படுத்தியும் முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் - என்றார். (க-இ)

## இலங்கைக்கு உதவுமாறு சீனாவிடம் கோரிக்கை

கொழும்பு,ஏப்.23

இலங்கை பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ள தருணத்தில், மேலதிக உதவிகளை சீனா வழங்கவேண்டும் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சீனத் தூதுவர் கி சென்ஹொங்கிடம் கோரிக்கை விடுத்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில், நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் எரிசக்தித் தட்டுப்பாடு குறித்து அமைச்சர் தூதுவருக்குத் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி உதவி மற்றும் இலங்கையின் கடனை மறுசீரமைத்தல் போன்றவற்றுக்காக நடைபெற்றுவரும் கலந்துரையாடல் உட்பட அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் குறித்தும் தூதுவருக்கு விளக்கினார்.

சாத்தியமான அனைத்து வழிகளிலும் சீன அரசாங்கம் இலங்கைக்குத் தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என்று தூதுவர் உறுதியளித்தார். (க-இ)



## பொலிஸ் பொறுப்பதிகாரி வீதி விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.23

மோட்டார் சைக்கிள், லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் விசேட பணியகத்தின் புத்தளம் பிரிவுப் பொறுப்பதிகாரி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து புத்தளம் - அநுராதபுரம் வீதியில் சிரம்பியடியப் பிரதேசத்தில் நடந்துள்ளது. உயிரிழந்தவர் கற்பிட்டி மாம்புரி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்த பொலிஸ் பொறுப்பதிகாரி, குருநாகல் போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

## அவுஸ்திரேலிய விபத்தில் இலங்கை மாணவன் சாவு

கொழும்பு, ஏப்.23

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற கார் விபத்தொன்றில் இலங்கை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இலங்கையின் அத்தனகல்ல வல்பொலப் பிரதேசத்தைச் சேர்ந்த இசுரு ஜீவந்த (வயது - 29) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் உயர்தர கணிதப்பிரிவில் கம்பஹா மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்குத் தேர்வாகி இருந்தார். இரண்டு வருடங்கள் அங்கு படித்துவிட்டு, மேற்படிப்புக்காக அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார்.

அந்த நாட்டில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி பயின்று வந்த மாணவன், இரண்டு மாதங்களில் உயிரிழந்துள்ளார். அவரது உடலை இலங்கைக்குக் கொண்டு வர நண்பர்கள் நிதி திரட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)

## லிட்ரோ நிறுவனத்தின் தலைவராக ஹேரத்

கொழும்பு,ஏப்.23

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் புதிய தலைவராக விஜித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

லிட்ரோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் தெஷார ஜயசிங்க அண்மையில் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார்.

இதனையடுத்து இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தலைவர் லிட்ரோவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (க-இ)

## கோப் குழுவுக்கு ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் அழைப்பு

கொழும்பு, ஏப்.23

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (கோப் குழு) அழைக்கப்பட்டுள்ளது. நாளைமறுதினம் குழுவில் முன்னிலையாகுமாறு ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

21 விமானங்களை குத்தகைக்கு எடுப்பதற்காக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் ஏலத்தில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில், ஆராய்வதற்காகவே ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்கோள் விழா







வடமராட்சி வலயமட்ட கால்கோள் விழா கரணவாய் தாமோதர வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெற்றது. பாடசாலை அதிபர் ஆ.விமலராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப்பணிப் பாளர் க. சத்தியபாலன். சிறப்பு விருந்தினராக கரவெட்டிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.புவனேந்திரராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-26)



கைதடி குருசாமி வித்தியாலயத்தின் கால்கோள் விழா கடந்த 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிபர் ந.ஜெய ரூபன் தலைமையில் நடைபெற்றது. (ய-159)



மீசாலைவீரசிங்கம்ஆரம்பவித்தியாலயத்தின் கால்கோள் விழா கடந்த 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வித்தியாலயத்தின் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம் இடம்பெற்றது. மாணவர்கள் பரிசில் கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ய-159)

# நிகழ்வுகள்



தென்னவன் கலாமன்றத்தின் புதுவருட விழாவும் கலையாக்கத்திறன் போட்டி யும் கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மந்துவில் மேற்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் தென்னவன் கலாமன்ற நிர்வாக இயக்குநர் கு.குகா னந்தன் தலைமையில் இடம்பெற்றது. கலையாக்கத்திறன் போட்டியில் வெற்றி யீட்டியவர்கள் புதுவருட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் மந்துவில் வட்டாரத்தில் புல மைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள் ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் பரி சில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ய-159)



துர்க்கா மழலைகள் கல்விப் பூங்காவின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் முகாமைத்துவக்குழுத் தலைவர் சிவசுதன் விஜிதா தலைமையில் இடம்பெற்றது. (ய-159)





[illegible]ட்டை தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவில் அம்மன் வீதி உலா வரும் காட்சி (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எரிபொருள் விலையேற்றத்தால் மீன்பிடியை கைவிட்ட மீனவர்கள்

**யாழ்ப்பாணம், ஏப்.22**

**எரிபொருள் விலையேற்றத்தைச் சமாளிக்க முடியாமல் குருநகர் மீனவர்கள் மீன்பிடித் தொழிலை தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர்.**



இதுதொடர்பில் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் யூலியன் சகாயராஜா தெரிவித்துள்ளதாவது:-
எமது பிரதேசத்தில் 400 படகுகள் இழுவைமடித் தொழிலில் ஈடுபடுகின்றன. எனினும் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் விலையேற்றத்தால் தொழிலை நிறுத்தியுள்ளோம்.
ஒரு நாள் தொழில் செலவினம் 24 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. ஆனால் நாளாந்தம் பெறப்படுகின்ற சராசரி வருமானம் 25 ஆயிரம் ரூபாவாக உள்ளது.
இந்த விலையேற்றம் எங்களுடைய வாழ்வாதாரத்தை முற்றுமுழுதாகப் பாதித்துள்ளது.
இதனால் ஆயிரத்து 600 குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தால் மீனவர்களுக்காக மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் பட்சத்தில் தொழிலை மீண்டும் செய்யக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும். அத்துடன் எம்மிடம் கடல் உணவுகளைக் கொள்வனவு செய்யும் கொள்வனவாளர்களிடம் நியாயமான விலையைக் கோரியுள்ளோம். பழைய விலைக்கே கடல் உணவுகளை அவர்கள் கொள்வனவு செய்தால் எங்களால் தொழிலை முன்னெடுக்க முடியாது -என்றார். (க-இ)



# வீதியில் நடமாடிய யானை பயணிகள் அசௌகரியம்

வவுனியா, ஏப்.23
வவுனியா, புளியங்குளம்- நெடுங்கேணி வீதியில் யானை ஒன்று வீதிக்கு வந்ததால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அந்த வீதியூடாகப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.
இந்த வீதியில் காட்டுக்குள் இருந்து யானைகள் அவ்வப்போது வருவதனால் அவ்வீதியூடாக அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-110)

# நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டும் வீதிப்புனரமைப்புச் சீரில்லை

*நல்லூர்ப் பிரதேச சபைத் தவிசாளர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம்,ஏப்.23
ஆனைக்கோட்டை முதல் கொக்குவில் - குளப்பிட்டி வரையான வீதிப்புனரமைப்புக்கு உரிய நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டும், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முழுமையாக வீதி புனரமைக்கப்படவில்லை என்று நல்லூர்ப் பிரதேச சபைத் தவிசாளர் பத்மநாதன் மயூரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இதுதொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முறைப்பாட்டுக் கடிதம் அனுப்பியும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்த வீதி பகுதி பகுதியாக காப்பெற் வீதியாகச் செப்பனிடப்பட்டது. அதற்கான நிதியொதுக்கீடு ஒப்பந்தக்காரர்களிடமும் கையளிக்கப்பட்டுள்ளது என்று அறியப்படுகின்றது. எனினும் வீதியின் மையப்பகுதியில் பெரும் கிடங்குகள் உருவாகியுள்ளன. இதனால் விபத்துக்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன. இதனை உடனடியாக மீள்புனரமைத்து மக்கள் பாவனைக்கு விடவேண்டும்- என்றார்.(க-125)



# கைவிடப்பட்டது வீதிப்புனரமைப்பு

*மக்கள் சிரமம்*

சாவகச்சேரி, ஏப்.22
சாவகச்சேரி - கனகன்புளியடி வீதி புனரமைப்புப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதால், மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.
'ஐரோட்' திட்டத்தின் கீழ், சாவகச்சேரி ரயில் நிலையம் தொடக்கம் புலோலி வரையான 17 கிலோமீற்றர் தூர வீதியைத் தார்க்கலவை வீதியாக மாற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் முதற்கட்டமாக சாவகச்சேரி அஞ்சலக வீதிச் சந்தியிலிருந்து கனகன்புளியடிவரையான வீதிப் புனரமைப்புக்கென வீதியின் இரு புறமும் வடிகால்கள் புனரமைக்கப்பட்டன. மதகுகளும் புனரமைக்கப்பட்டன. பின்னர் அனைத்து வேலைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் வீதியின் பல இடங்களிலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.
பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இந்தவீதியில் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் மற்றும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி போன்றவை உள்ளன. இதனால் மாணவர்களும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.
இதுதொடர்பாக சாவகச்சேரி நகரசபை தவிசாளரிடம் கேட்டபோது, வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்புப் பணிகள் ஒரு வருடத்துக்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளன. வீதிப்பணிகளை விரைவில் மேற்கொள்ளுமாறு பல தடவைகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன-என்றார்.(க-9)

# மெய்நிகர்வழி ஆய்வரங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 23
திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக 'கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை ' என்ற தலைப்பில் மெய்நிகர் வழியில் இடம்பெற்றுவரும் ஆய்வரங்கத் தொடரின் 10 ஆவது நிகழ்வு நாளை மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.
யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் 'ஈழத்துக் கவிதை இலக்கிய வரலாற்றில் மரியசேவியர் அடிகளின் பங்களிப்பு' என்ற தலைப்பில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியரும், கலை இலக்கிய செயற்பாட்டாளருமான ந.குகபரன் ஆய்வை வழங்கவுள்ளார்.
ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 789 3644809, கடவுச்சொல் cpa என்பவற்றினூடாக இணைந்துகொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (எ-14)

# இளைஞர்கள் மோதல்; மூவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஏப். 23
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்யூட் பகுதியில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் மூவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மதுபோதையில் இருந்த இளைஞர்கள் சிலர், வீதியால் சென்ற இளைஞர்களுடன் தகராறில் ஈடுபட்டனர் என்றும், அதையடுத்து இரு இளைஞர் குழுக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
தாக்குதலில் 4 பேர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இளவாலை சென்யூட் மற்றும் மாரிசன்கூடல் பகுதியைச் சேர்ந்த 24 முதல் 26 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மூவரை இளவாலைப் பொலிஸார் கைதுசெய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (எ-14,125)

# மரக்கன்றுகள் வழங்கல்

கொடிகாமம், ஏப்.23
தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெற்றது. (ச-159)

# நெல் களஞ்சியத் திட்டம் மன்னாரில் முன்னெடுப்பு

மன்னார், ஏப். 23
நெற்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் கடந்த வருட இறுதியில் அறுவடை செய்த நெல், மன்னார் முருங்கன் [illegible] நெற்களஞ்சியத்தில் [illegible] படுத்தப்பட்டது.
கடந்த வருட இறுதி பெரும்போகச் செய்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 விவசாயிகளுக்கு குறித்த நிறுவனத்தால் நெல் விதைகள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஆகியன வழங்கப்பட்டு நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.
இந்நிலையில் அறுவடையில் 10 ஆயிரம் கிலோ விதை நெல், பெரும்போகச் செய்கைக்காகத் தயார் நிலையில் உள்ள விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கென களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மன்னார் மெசிடோ நிறுவனப் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ, நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-14, 213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி விலகியதை தடுத்த கோத்தாபய

கொழும்பு, ஏப்.23

கடந்த 18ஆம் திகதியன்று அமைச்சராக பதவியேற்ற நாலக கொடஹேவ 20ஆம் திகதியன்று தமது அமைச்சுப் பதவியில் இருந்து விலகல் கடிதத்தைக் கையளித்தார். ஆனால் அதை ஊடகங்களுக்கு அறிவிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அவரைக் கேட்டுக் கொண்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதை நாலக கொடஹேவவிடம் உறுதிபடுத்திக் கொள்ள முடியும். இந்தப் பதவி விலகல், சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தையைப் பாதிக்கக் கூடும் என்பதால் அது முடிவடையும் வரை இதை ஊடகங்களுக்குத் தெரிவிக்கவேண்டாம் என அவரை ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

தனது அலுவலகத்துக்கு சென்று பணியாற்ற முடியாத ஜனாதிபதி இன்று இலங்கையில் செயற்படுகின்றார். இதற்குப் பதிலாக ஜனாதிபதி வீட்டுக்குச் செல்லலாம். இப்போது கோத்தாபய மற்றும் ராஜபக்சக்களுக்கு ஆதரவளித்தவர்கள் மன்னிப்புக் கோரும் இடமாக காலிமுகத்திடல் மாறிள்ளது - என்றார். (எ-இ)

# 21ஆவது திருத்த யோசனைகளை முன்வைத்த சுயாதீன எம்.பிக்கள்

கொழும்பு, ஏப்.23

**அரசிலிருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்பட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பான யோசனை வரைவை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் நேற்றுக் கையளித்துள்ளனர்.**



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, விமல் வீரவன்ஸ அணி, உதய கம்மன்பில அணி உள்ளிட்ட 11 கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்த யோசனை வரைவை சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த வரைவில் பிரதானமாக அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நீக்கவேண்டும் என்றும், 19ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே தனது யோசனை வரைவை சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளது. சஜித் அணி 21ஆவது திருத்த யோசனை வரைவைமுன்வைத்துள்ள நிலையிலேயே அந்தத் திருத்தம் தொடர்பில் சபாநாயகரிடம் இரண்டாவது யோசனை வரைவும் கையளிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# தாம் ஊழல்வாதிகள் அல்லராம் நிரூபிக்கத் தயார் என்கிறார் நாமல்

கொழும்பு, ஏப்.23



நானோ, எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ ஊழல்வாதிகள் அல்லர். நாம் முறைகேடாக சொத்துக்கள் திரட்டியிருந்தால் உலகில் எந்த நீதிமன்றிலும் எவரும் முறையிடலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எனது சொத்துக்களைக் கணக்காய்வு செய்து அதன் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த 12 வருடங்களில் அரசியல் மூலம் முறைகேடான விதத்தில் பணம் சம்பாதித்திருந்தால், அதுபற்றி உலகின் எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யலாம். எனது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளேன். நாம் முறைகேடாகத் திரட்டிய சொத்துக்கள் உலக நாடுகளில் இருக்குமாயின், அது தொடர்பில் வழக்குப் பதிவு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# இராயப்பு ஜோசப் ஆயரின் தீர்க்கதரிசனம் பலிக்கின்றது!

## நாடாளுமன்றில் தெரிவித்த செல்வம் எம்.பி.

கொழும்பு, ஏப்.23

மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் அன்று தீர்க்கத் தரிசனமான கூறிய கருத்தே தற்போது நாட்டில் நடந்துக்கொண்டிருக்கிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மன்னார் முள்ளிக்குளம் பிரச்சினை தொடர்பில் பாதுகாப்பு செயலாளராக இருந்தவேளையிலேயே கோத்தாபய ராஜபக்சவை முன்னாள் ஆயரும் நானும் சந்திக்கச் சென்றிருந்தோம். சந்திப்புக்காக பிற்பகல் 3மணிக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தபோதும் இரவு 7 மணிக்கே சந்திப்புக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. கோத்தாபய ராஜபக்ச, இராயப்பு ஜோசப் ஆண்டகையை கருத்தில் கொள்ளாமல் நடந்து கொண்டார். இதன்போது "எனது மக்களின் பிரச்சினைகளை பேச வந்தபோது நீங்கள் அதைக் கருத்தில்கொள்ளவில்லை. நான் உயிருடன் இருந்தாலும் இல்லையென்றாலும் நிச்சயமாக சிங்கள மக்கள் உங்களை தூசிப்பார்கள்" என்றுகூறியிருந்தார். இது இன்று உண்மையாகியிருக்கிறது - என்றார். (எ-இ)

# பொலிஸ் வாகனம் மீது தாக்குதல்

கொழும்பு, ஏப்.23

காலி கந்தர பொலிஸ் நிலையத்துக்குச் சொந்தமான வாகனத்தின் மீது நேற்றுமுன்தினம் இரவு தெவுந்தர பகுதியில் வைத்து இனந்தெரியாதவர்கள் கல் வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கந்தர பொலிஸ் நிலைய அதிகாரிகள் இருவர் இரவு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்றபோது அந்தப்குதியில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

# வவுனியா விபத்தில் இருவர் படுகாயம்!

வவுனியா, ஏப்.23



வவுனியா - மன்னார் வீதியில் உள்ள வேப்பங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து நேற்று மதியம் நடந்துள்ளது.

வவுனியா, குருமன்காடு பகுதியில் இருந்து மன்னார் வீதி வழியாக மோட்டார் சைக்கிள் ஒன்று பயணித்துக் கொண்டிருந்தபோது உக்குளாங்குளம் பகுதியில் இருந்து மாதா கோவிலூடாக மன்னார் வீதிக்கு முச்சக்கர வண்டி ஒன்று ஏறமுற்பட்டது. இதன்போது இரு வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகி வீதியை விட்டு விலகின.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் முச்சக்கர வண்டிச் சாரதி ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஏ-இ)

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒத்திவைக்கப்படவேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.23

நிதியமைச்சர் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நாடாளுமன்றத்துக்கு தெரியப்படுத்திய பின்னரே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அதுவரையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து விவாதிப்பது அர்த்தமற்றது. அரசாங்கம் சாத்தியமான நிதித் திட்டத்தை முன்வைக்கும்வரை சர்வதேச நாணயநிதியத்தால் இலங்கைக்கான துரித நிதி உதவியை வழங்க முடியாது.

தற்போதைய நெருக்கடிக்கான தீர்வுகளை பிரதமரும் ஜனாதிபதியும் நாடாளுமன்றத்துக்கும் மக்களுக்கும் சமர்ப்பிக்க வேண்டும். 113 பெரும்பான்மையுடன் அரசாங்கத்தால் இந்த நெருக்கடிக்குத் தீர்வைக் காணமுடியாது - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆதரவை தெரிவித்தது யு.என்.டி.பி.

கொழும்பு, ஏப்.23
இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளைத் தணிக்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் தனது ஆதரவை வழங்கியுள்ளது.
சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைக்காக வொஷிங்டனில் இருக்கும் நிதியமைச்சர் அலி சப்ரி மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் ஆகியோருக்கு இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.
இதன்போதே ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட நிர்வாகி அச்சிம் ஸ்டெய்னர் சாதகமான பதிலை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தற்போதைய கடன் நெருக்கடிக்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவ ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்று அவர் இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.
பொருளாதாரத்தில் எதிர்மறையான போக்கு குறைக்கப்படுவதையும், குறிப்பாக ஆபத்திலுள்ள மக்களின் நலன் கருத்தில் கொள்ளப்படுவதையும் இது உறுதி செய்யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

## காலிமுகத்திடல்
# போராட்டக்களத்தில் மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, ஏப். 23
காலிமுகத்திடல் போராட்டத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாயர் மஹிந்த தேசப்பிரிய நேற்றுக் கலந்துகொண்டார்.
அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பதவி விலகுமாறு வலியுறுத்தி காலி முகத்திடலில் பொதுமக்கள் தன்னெழுச்சிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டக் களத்துக்கு பிரபலங்கள் மற்றும் நட்சத்திர விளையாட்டு வீரர்கள் நேரில்சென்று கலந்துகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். ஆர்ப்பாட்டத்தின் 14ஆம் நாளான நேற்றையதினம் மஹிந்த தேசப்பிரிய போராட்டக் களத்துக்குச் சென்று கலந்துகொண்டார்.

(ம)


# VACANCY
## PRIVATE SECRETARY
### FOR MANAGING DIRECTOR (FEMALE)

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள UK based property development நிறுவனமாகிய TILKO Estates நிர்வாக இயக்குநருக்கு தகுதிவாய்ந்த, அனுபவமிக்க, கணினி அறிவுள்ள , ஆங்கிலம் பேசவும், எழுதவும் தெரிந்த Female Secretary தேவை. Salaty in excess of 30,000 **(அனுபவம், வயது என்பவற்றைப் பொறுத்தது)**

**Please Forward your CV to:- tilko.tilak@gmail.com or call 077 769 6443 for interview appointment**


# கண்ணீர் அஞ்சலி




**தோற்றம்** 30.05.1955 **மறைவு** 22.04.2022

மந்துவில் வடக்கு குட்மன் சனசமூக நிலையத்தின் பொருளாளர் **கதிரவேலு** அவர்களின் அன்புத் துணைவி **கதிரவேலு பூரணம்** அவர்கள் நேற்று (22.04.2022) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CR 8304) (4/6)

**மந்துவில் வடக்கு, குட்மன் சனசமூக நிலையத்தினர்.**

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லத்துரை யோகநாதன்**
(ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - யா/ இணுவில் இந்துக் கல்லூரி)

**தோற்றம்** 19.05.1944
**மறைவு** 13.05.2012

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
எமக்கு வழிகாட்டி வாழ்ந்து எம்மைவிட்டுப்
பிரிந்து ஆண்டு பத்து மறைந்தது அப்பா!
ஆனால் உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து ஒரு போதும் மறைவதில்லை
உங்களுடைய ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

(cs 19386) (2/6)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

# கோப்பாயில் வாள்வெட்டு குடும்பத்தலைவர் காயம்!

யாழ்ப்பாணம், ஏப். 23
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் குடும்பத் தலைவரொருவர் காயமடைந்தார்.
சவரிமுத்து சின்னராசா (வ்யது 54) என்ற நபரே காயமடைந்தவராவார். அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
குறித்த நபரின் வீட்டுக்குள் புகுந்த எட்டுப் பேர்கொண்ட குழுவே இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்று பொலிஸாரின் முதல்கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(ம-125)

# மரண அறிவித்தல்
## திருமதி தங்கம்மா அமிர்தலிங்கம்



**தோற்றம்** 27.04.1932
**மறைவு** 22.04.2022

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா அமிர்தலிங்கம் அவர்கள் நேற்று (22.04.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமர் முத்துப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (ஐயாத்துரை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராசையா (ஓய்வுநிலை காணி உத்தியோகத்தர்), நல்லம்மா, மகேஸ்வரி காலஞ்சென்ற இராசம்மா மற்றும் யோகராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவநேசம், சிவராசா (லண்டன்), சிவசுதா (சுவிஸ்), சிவசாந்தி (ஆசிரியர்-யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), சிவகலா (ஆசிரியர்-கொ/கொட்டகேனா சென்.அந்தனிஸ் ஆண்கள் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நடராசா (ஓய்வுநிலை சிறைச்சாலை உத்தியோகத்தர்), சகுந்தலா (லண்டன்), தர்மலிங்கம் (சுவிஸ்), விஜயகோபால் (Milk white), உருத்திரானந்தன் (தொழிலதிபர்-கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், பாஸ்கரன்-சுபாஷினி (UK), துசிகரன்-துஷிதா (அவுஸ்திரேலியா), துஷியந்தி (ஆசிரியர்- யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சிவகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் நகராட்சி மன்றம், சாவகச்சேரி), சுபாஸ்கரன்-சரணியா (UK), பிரதீபா- உஷாந்தன் (பிராந்திய முகாமையாளர், Robbialac Paint- Jaffna), செந்துஜன், சாருஜன், ஆரணி (UK), சஞ்சீவன், சகானா (சுவிஸ்), சங்கீபன் (சவிஸ்), பைரவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கபிஷயா, கேஷயா, கௌஷயா, கபிஷ்னா, அனிஸ், லாகித்யன், வர்ஷயா, சிவாணன், லகிஷயா, பானுஜன், தார்மிகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் பாலாவித்தாள் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சாய் வீதி, கொடிகாமம்.**
**077 715 0931, 077 766 6684**
**077 722 6997, 076 244 4509**

(CR 8306) (4/6)

**தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகம் ஆதனப்பெயர்மாற்ற வெளிப்படுத்தல் தொடர்பானது

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02, புத்தூர் வீதி ஆதன இலக்கம்: Nil என்ற இலக்கத்தை கொண்டதும் "நிற்சானை" நிலப்பரப்பு 20 கொண்ட கிராமசேவை யாளர் பிரிவு : J /262, கோப்பாய் கோவிற்பற்று, கோப்பாய் தெற்கு இறையில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையாளர் பெயர்: பதியப்படாத ஆதனம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தினை விளையாட்டரங்க வீதி, கல்வியன்காட்டை சேர்ந்த சுப்பிரமணியம் சுரேஸ்குமார் பெண் நஜீவா என்பவர் நிலப்பரப்பு 20 இற்கு உரிமை கோருகின்றார்.

மேற்குறித்த இல: Nil, புத்தூர் வீதி ஆதனமானது (நிலப்பரப்பு 20) சமர்ப்பிக்கப்பட்ட மாதிரித்திரட்டின் படி பிரசித்த நொத்தாரிசு திரு.கனகரட்ணம் கேசவன் அவர்களால் எழுதப்பட்ட 16901 ஆம் இலக்க 30.12.2020 ஆம் திகதிய திருத்தல் உறுதி மூலம் பொன்னம்பலம் சந்திரன் என்பவரிடமிருந்து சுப்பிரமணியம் சுரேஸ்குமார் பெண் நஜீவா என்பவரிற்கு மாதா வழி முதுசமும், நெடுங்கால தடையற்ற ஆட்சி யுமாக நிந்தமாக வந்தடைந்தது.

மேற்படி நிலப்பரப்பு 20 இற்கு எல்லைகளாக கிழக்கு எஸ்.வசந்தகுமாரியின் ஆதனம், வடக்கு குறித்த படத்தில் சுட்டிய 4ஆம் 5ஆம் இலக்கத்துண்டுகளான பாதை, மேற்கு குறித்த படத்தில் சுட்டிய 3ஆம் இலக்கத்துண்டான 12 அடி பாதை, தெற்கு குறித்த படத்தில் சுட்டிய 2ஆம் இலக்க துண்டு ஆதனம். இவ்வாதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.தெ.தங்கராஜா அவர்களால் அளந்து வரையப்பட்ட 9647 ஆம் இலக்க 03.09.2017 ஆம் திகதிய படத்தில் Lot – 01 என குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தினை சுப்பிரமணியம் சுரேஸ்குமார் பெண் நஜீவா என்ற பெயருக்கு ஆதனப்பதி வேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 06.05.2022 ஆம் திகதிக்கு முன்னர் (14 நாட்களுக்குள்) சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுப்பிர மணியம் சுரேஸ்குமார் பெண் நஜீவா என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் சேவையுணர்வுடன் அறியத்தருகின்றேன்

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர்.**
**23.04.2022**

(in.17233) (2.6)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 01 . 09 . 1949



மறைவு 25 . 03 . 2022

கடந்த (25.03.2022) இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் வல்லிபுரம் சதாசிவம் செல்வராசா

(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர், கமநலசேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளையதினம் 24.04.2022 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு : இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**திருநாவலூர்,**
**புலோலி மேற்கு, பருத்தித்துறை.** (IN.17232) (2.6)

**குடும்பத்தினர்**

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 10 . 1941



மறைவு 21 . 04 . 2022

### குமாரசிங்கம் பரராமசிங்கம் (பத்தர்)

தும்பளையை பிறப்பிடமாகவும், டச்சு வீதி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசிங்கம் பரராமசிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (21.04.2022) வியாழக்கிழமை நள்ளிரவு இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பபூபதியின் அன்புக் கணவரும், கோகுலன், Dr. கண்ணன் (டிக்கோயா ஆதாரவைத்தியசாலை), தசோதரன் (இந்தியா), அபிராமி (மருந்துக் கலவையாளர், ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம், புன்னாலைக் கட்டுவன்), கார்த்திகேயன் (மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணவேணி, காலஞ்சென்ற கருணாகரன், காலஞ்சென்ற தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவமலர், சுகந்தி (ஆசிரியை, ஹட்டன்), கவிதா, லோகராஜா (அதிபர் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), ராஜினி (MLT, யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சேயோன், வெங்கடேஷ், ப்ரணவ், தபஸ்வினி, மகிழன், ரிஷிகேஷினி, டிவாஷினி, ரிதுரக்ஷினி, ஷிருஸ்டிஹறன், ஹறிணி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற இிராஜேஸ்வரி மற்றும் பரமசாமி, பரமேஸ்வரி, பொன்மணி, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.04.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டச்சுறோட்,**
**உடுவில்.** (cs.41961) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 678 6393**

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 09 . 1939



மறைவு 19 . 04 . 2022

### திரு. கதிரிப்பிள்ளை சுப்பிரமணியம்

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கதிரிப்பிள்ளை சுப்பிரமணியம் கடந்த (19.04.2022) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை கதிரிப்பிள்ளை நாச்சிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், நடராசா காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், துரைசிங்கம் ஆகியோரின் அண்ணனும், சுபவவானி, பார்த்தீபன் (Norway), ஜீவகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் லோகேஸ்வரி (Norway), சிறீகரன் (தெல்லிப்பழை Union college) ஆகியோரின் மாமனாரும், கிரிசாத், அர்சாத், அகி, அபிரேகா ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலிட்டியில் உள்ள கொட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**BOC Lane,**
**சுன்னாகம்.** (cs19442)(2.6)

**தகவல்:**
**பிள்ளைகள்**
**077 8384 020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்டவாளத்தில்...

வர் உயிரிழந்து இருவர் காயமடைந்த நிலையில், அவ்விடத்தில் ஒன்றுகூடிய பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ரயில் தண்டவாளத்துக்குக் குறுக்காக மரங்களைப் போட்டு ரயில் போக்குவரத்துக்கு பொதுமக்கள் தடைபோட்டதுடன், ரயர்களை தண்டவாளத்தில் போட்டு எரியூட்டினர். இதையடுத்து அந்த இடத்துக்குப் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

பாதுகாப்பான ரயில் கடவைகள் இல்லாதமையால் இதுபோன்ற விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. எனவே பாதுகாப்பான ரயில் கடவைகள் அமைக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

(அ-ம-9-159)

## ரயிலுடன்...

சிறுவன் ஒருவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். மேலும் இருவர் படுகாயங்களுடன் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- காங்கேசன்துறையில் இருந்து கொழும்புநோக்கி நேற்றுப் பயணித்த ரயிலுடன் கொடிகாமம் மிருசுவில் மருத்துவமனைக்கு அண்மையில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முயன்ற பட்டா ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் கொடிகாமம் தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த தயாபரன் ஜனுசன் (வயது-12) எனும் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். உயிரிழந்தவரின் தந்தையான நாகமணி தயாபரன் (வயது-45) மற்றும் உயிரிழந்தவரின் சகோதரனான தயாபரன் தனுஷன் (வயது-15) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(அ-ம-20-159-9-125)

## கொலைகாரக்...

தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் 66 ஆவது பிறந்தநாள் நினைவு தினத்தையொட்டி கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தனக்கு எதிரான மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தைத் துப்பாக்கிமுனையில் அடக்க முயல்கின்றார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. ரம்புக்கனை சம்பவத்தின் ஊடாக, தான் கொலைகாரன் என்பதை ஜனாதிபதி மீண்டும் நிரூபித்துள்ளார்.

'கோ ஹோம் கோத்தா' என்ற கோஷத்துடன் கொழும்பு காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கு ஆதரவாக நாடு முழுவதும் மக்களின் போராட்டங்கள் வலுவடைந்துள்ளன. இது ஜனாதிபதிக்கும் அவர் தலைமையிலான அரசுக்கும் சர்வதேச அரங்கில் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதைப் பொறுக்க முடியாத கோத்தாபய அரசு, மக்களை வன்முறைக்கு இழுத்து அவர்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தை துப்பாக்கிமுனையில் அடக்க முயலும். எனவே, மக்கள் வன்முறையில் இறங்காமல் அமைதியாக ஜனநாயக வழியில் தொடர்ந்து போராட வேண்டும். கொலைகாரக் கோத்தாபயவை வீட்டுக்கு விரட்டும்வரை மக்கள் ஓயாமல் போராட வேண்டும்' - என்றார். (அ-ம)

## பிரதமர்...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே, ஆளுங்கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான டலஸ் அழகப்பெரும இந்த அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

குறித்த கடிதத்தின் பிரதிகள் பிரதமர் மற்றும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

'தேசிய நிகழ்ச்சி நிரலை அடிப்படையாகக்கொண்டு, அனைத்து கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி அவற்றின் ஒத்துழைப்பை பெறக்கூடிய புதிய சர்வக்கட்சி அரசாங்கத்தை அமைக்க நாடாளுமன்றத்துக்கு வாய்ப்பளிக்க வேண்டும். இதற்காக தற்போதைய அமைச்சரவை வழிவிட்டால், அந்த தியாகத்துக்கு இந்நாட்டு வரலாற்றில் உரிய கௌரவம் கிட்டும்' எனவும் மேற்படி கடிதத்தில் டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் மட்டுப்படுத்தப்பட்ட அமைச்சரவையை, குறைந்தபட்சம் ஒரு வருடகாலத்துக்காவது நியமித்து, சவால்களை எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் டலஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-ம)

## இரண்டு...

போராட்டத்தில் ஈடுபட்டனர். ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (ம)

## இனிமேல்...

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸ் மா அதிபர் நேற்று வாக்குமூலம் வழங்கினார். தனது வாக்குமூலத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிராயுதபாணிகளான பொதுமக்களுக்கு எதிராக துப்பாக்கிச்சூடு நடத்துமாறு நான் உத்தரவு வழங்கவில்லை. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவோருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. பொதுமக்களின் போராட்டங்களுக்கு எதிராக துப்பாக்கிகள் பயன்படுத்தப்படாது என்று பொலிஸ்மா அதிபர் கூறினார் என இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் நிமல் கருணாசிறி தெரிவித்துள்ளார். (அ-ம)

## ஏற்றியது...

நேற்று நண்பகலளவில் லிட்ரோ நிறுவனம் 12.5 கிலோகிராம் எரிவாயுவின் விலையை சுமார் 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரித்து, புதிய விலையாக 5 ஆயிரத்து 175 ரூபாவை நிர்ணயித்தது. ஆனால், இந்த விலையேற்றத்தை அரசாங்கம் அங்கீகரிக்க மறுப்புத்தெரிவித்துள்ளது. முன்னைய விலையில்தான் எரிவாயு சிலிண்டர்கள் தொடர்ந்தும் விற்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனால் தொடர்ந்தும் சிலிண்டருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

(அ-ம)

## நஸீர் நீக்கம்...

வெளியிட்ட ரவூப் ஹக்கீம், 'கட்சியின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். இது சம்பந்தமாக அவர்களிடம் விளக்கம் கோரப்பட்டது. அவர்கள் அனுப்பியிருந்த விளக்கம் பற்றி ஆராயப்பட்டது. மூவர் அனுப்பிய விளக்கம் தொடர்பில் ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் விசாரணை இடம்பெறும். அதுவரை கட்சி உறுப்புரிமையில் இருந்து தற்காலிகமாக நிறுத்தப்படுவர்.

நஸீர் அஹமட் வழங்கியிருந்த விளக்கம் திருப்திகரமாக அமையவில்லை. உண்மைக்கு புறம்பான விடயங்களை அதில் குறிப்பிட்டுள்ளர். எனவே அவரை உடனடியாக கட்சியில் இருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.' - என்றார். (ம)

## இந்தியாவுக்கு...

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதை அடுத்து, பலர் அகதிகளாக இந்தியாவுக்குச் சென்று தஞ்சமடைந்து வருகின்றனர். நேற்றுமுன்தினம் மட்டும் 18 பேர் அகதிகளாக இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர், மன்னார் பேசாலையிலிருந்து கடல் வழியாக இராமேஸ்வரத்துக்கு அருகில் உள்ள சேராங்கோட்டை எனும் பகுதியைச் சென்றடைந்துள்ளனர். அதே வேளை மன்னாரைச் சேர்ந்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர் தனுஷ்கோடி அரிச்சல் முனைப்பகுதியைச் சென்றடைந்துள்ளனர்.

இவர்களுடன் சேர்ந்து, கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதியிலிருந்து இதுவரை 60 பேர் இந்தியாவுக்கு கடல் வழியாகச் சென்று தஞ்சமடைந்துள்ளனர். அனைவரும் மண்டபம் அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (அ-க-20)

## சமிந்தவின்...

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சமிந்த லக்சானின் பூதவுடலுக்கு நேற்று நேரில் அஞ்சலி செலுத்திய பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது வீட்டுத் தேவைக்காக எண்ணெய் பெற்றுக்கொள்ள வந்த சமிந்தவை கொடூரமாகக் கொலை செய்த அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்தக் கொலைச் சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்த அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவர சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் - என்றார். (அ-ம-22)

## தடுப்புக்காவல்...

யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்த இளைஞனே கழுத்தில் காயங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனுக்கு எதிராக யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிடியாணை உத்தரவை நிறைவேற்றும் முகமாக யாழ்ப்பாண பொலிஸாரால் இளைஞன் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் குறித்த இளைஞன் கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர், தனது உடமையில் இருந்த பிளேட்டினை எடுத்து தனது கழுத்தை அறுத்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-20)

## நேர்மையான...

சாட்டு பரவலாக எழுந்துள்ளது. இதனால் தாம் நேர்மையாகப் பணிசெய்ய முடியாதளவுக்கு மன அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளதாகவும், மக்களின் பணிகள் முடக்கப்படுவதாகவும் நிர்வாக அதிகாரிகள் பலர் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

தமக்கு நிரந்தர நியமனம் தருமாறு கோரி போராட்டம் நடத்திய சுகாதாரத் தொண்டர்களுக்கு 'நிரந்தர நியமனம் தருவேன்' என உறுதிமொழி வழங்கியிருந்தார். அதனை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரையும் விடுத்தார். ஆனால் அவ்வாறு நியமனம் வழங்க, மத்திய அரசு அனுமதி வழங்க மறுத்துவிட்டது. மத்திய அரசு அனுமதித்தால் மாத்திரமே அந்த நியமனங்களை வழங்கமுடியுமென்பதால், அந்த திணைக்கள அதிகாரிகள் ஆளுநரின் நடைமுறைக்கு பொருத்தமற்ற உத்தரவை நிறைவேற்றவில்லை. இதனால் அவர்களை 'ஆளுமையற்ற' பதவிகளுக்கு உடனடியாக மாற்றியுள்ளார் ஆளுநர்.

அதேவேளை, வடக்கு மாகாண மக்களுக்கு உள்ள உரிமைகளை தென்னிலங்கைக்கு தாரைவார்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு ஆளுநர், அதிகாரிகளுக்கு உத்தரவிடுகின்றார் எனவும், அவ்வாறு ஆளுநரின் தாளத்துக்கு ஆடமறுப்போரை பழிவாங்கும் வகையில் செயற்படுகின்றார் எனவும் கூறப்படுகின்றது. அரச நிர்வாக நடைமுறைகளோ, களயதார்த்த நிலையோ தெரியாததாலேயே ஆளுநர் இவ்வாறு சர்வாதிகாரப் போக்கோடு நடந்து கொள்கிறார் என அதிகாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதேபோன்று, தன்னுடைய தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்காத பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் சிலரையும் உத்தியோகபூர்வக் கடிதங்களோ, உரிய காரணங்களோ இன்றி ஒரு குறிப்புச் சீட்டு உத்தரவை பிரதம செயலருக்கு அனுப்பி, அவர்களை இடமாற்றுமாறும் ஆளுநர் அழுத்தம் கொடுக்கின்றார் என்றும் தெரியவருகின்றது.

மக்களுக்காக நேர்மையோடும், சட்டதிட்டங்களை மதித்து அர்ப்பணிப்போடும் கடமையாற்றும் அதிகாரிகளை ஆளுநர் இவ்வாறு தன்னிஷ்டப்படி பந்தாடுவதால் நிர்வாக அதிகாரிகள் மட்டத்தில் பெரும் குழப்பநிலை தோன்றியுள்ளது.

(அ-ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு மக்கள் நன்றி கூறவேண்டுமாம்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.23**

**எத்தியோப்பியா போன்ற நாடுகளைப் போன்று வாரத்துக்கு ஒருமுறை எரிவாயு விநியோகம் செய்யும் நாடு இலங்கை அல்ல. அதற்காகப் பொதுமக்கள் நன்றி தெரிவிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன.**

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; இலங்கை மட்டுமன்றி முழு உலகமும் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. இந்தப் பொருளாதார நெருக்கடியால் பாகிஸ்தான் மற்றும் நேபாளத்தில் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடினர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அரசியல்வாதிகளின் பேராசையே காரணம். வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு 2006ஆம் ஆண்டு முதல் முயற்சிகள் எடுக்கப்படவில்லை -என்றார். (ஏ-இ)

## மான் இறைச்சி வைத்திருந்தவருக்கு 25000 தண்டம்

மூதூர், ஏப்.23

மூதூர்-கிளிவெட்டி மேம்காமம் பகுதியில், மான் இறைச்சியை வைத்திருந்த ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி நேற்று உத்தரவிட்டார்.

இந்த நபர் சட்டவிரோதமாக வேட்டையாடப்பட்ட மான் இறைச்சியை வைத்துள்ளார் என்று மூதூர் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து ஒரு கிலோ 250 கிராம் மான் இறைச்சி கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபரை மூதூர் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தியபோது நீதிமன்றம் அபராதம் விதித்தது. (ஏ-இ)

### நூல் வெளியீட்டு விழா

யாழ்.23

உரும்பிராய் வி.ஜெகநாதன் எழுதிய 'பெண்ணாய் ஒருமுறை பிறப்பாய் போற்றி' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய சமாதானப் பேரவையின் செயற்திட்ட முகாமையாளர் ஞா.வொட்கின்சன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இரா.செல்வவடிவேல் பிரதம விருந்தினராகவும் வணக்கத்திற்குரிய யோசப் ஸ்டாலின் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர். (ம)


## பெண் வேலையாள்கள் தேவை

இயற்கை விவசாயம் தெரிந்த அனுபவமுள்ள பெண் வேலையாள்களும், உணவுப்பொருள் உற்பத்திப் பகுதிக்கும் பெண் வேலையாள்கள் தேவை. வெளிமாவட்டத்தினருக்கு தங்குமிட வசதி உண்டு. உங்கள் சுயவிபரக்கோவையை 076 463 7668 என்னும் Whats app Viber இலக்கத்துக்கு அனுப்பவும்.

076 463 7668

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தி, மருத்துவபீடத்திற்கு அருகில் ஆடியபாதம் வீதியில் 13 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
முழுமையாகவும் அல்லது பிரித்தும் வழங்கப்படும்.
**(ஞாயிற்றுக்கிழமை காணி பார்வையிடலாம்)**

(CR 8305) (4/6)

**தொடர்பு : 077 667 9391**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஓட்டுமடச்சந்தியிலிருந்து முதலாம் ஒழுங்கை பகுதியில் 12 அடிப்பாதையுடன் 06 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
(இரண்டு பரப்புகளாகவும் பிரித்து கொடுக்கப்படும்)
**பார்வையிடும் நேரம்:- 8.00AM-6.00PM**
**(ஒரு பரப்பின் விலை:- 8 லட்சம்)**

(CS 19459) (4/6)

**தொடர்பு : 076 844 6536**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்திற்கு கீழ்வரும் வேலைகளிற்கு வேலையாள்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

*Computer Billing (Boys &Girls)
*தங்கி நின்று வேலை செய்வதற்கு (ஆண்கள் மட்டும்)
*கனரக வாகன சாரதி
*பகுதி நேர வேலையாள்கள் (ஆண்கள் மட்டும்)
(4.00 P.m - 9.00 P.m

(cs 44281) (2.6)

**077 419 5015**


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 - 12 - 1953 | | 22 - 04 - 2022 |



## சோமசுந்தரம் செல்வராசா (ஆசாரியார்)

வேலம்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் செல்வராசா (ஆசாரியார்) நேற்று (22.04.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் சிவபாக்கியம் தம்பதிகளின் மகனும், அமரர் முருகுப்பிள்ளை பசுபதி தம்பதிகளின் மருமகனும், இன்பமலரின் கணவரும், இன்பறாஜி (பிரான்ஸ்), இந்திரமதி, இன்பறாஜ் (ஜேர்மனி), இந்திரராஜ் (கொலண்ட்), இந்திரவதனா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நவரத்தினம் (தலைவர்), பரமசிவம், அமரர் குணரத்தினம், செல்வராணி, அழகராசா, மகேஸ்வரி (ஜேர்மனி), மகேந்திரன் (கொலண்ட்), ஜெயகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாநிதி (கனடா), அமரர் விவேகானந்தன் புஸ்பராணி, அமரர் விஜயகுமாரி ஆகியோரின் மைத்துனரும், துரைசிங்கம் (பிரான்ஸ்), சிவநேசன், சத்யரூபி (ஜேர்மனி), நிதர்சன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், கனுசன் (பிரான்ஸ்), விதுசன் (பிரான்ஸ்), சகிலன் (பிரான்ஸ்), சஞ்சித், விக்னேஸ், சஸ்ணவி, இசைநிகா (ஜேர்மனி), சஸ்வின் (ஜேர்மனி), ஆருத்ரன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை வேலம்பிராயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 19462) (4/6)

**தகவல்: குடும்பத்தினர்.**

**வேலம்பிராய், கோயிலாக்கண்டி மேற்கு, தச்சன் தோப்பு, கைதடி.**
**மகன்:- 077 976 4251, மகள்:- 077 987 2729**


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதியிலிருந்து 2ஆம் காணி 87 பரப்பு 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. (யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6Km தூரம், ஒரு பரப்பின் விலை 5 லட்சம், 18 அடிப்பாதையுடன் நல்ல சூழல், நன்னீருற்று)**

PLAN No:8611

SITE AT NAVATKULI




**தொடர்பு:- 074 291 3725, 074 291 3726, 074 291 3727**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.